தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

விலை 40 ரூபா • தீபம் 172 • 03.02.2019



**தமிழ்க்கங்கை ஹாட்வெயார்-வண்ணச்சோலை**

அனைத்து விதமான கட்டடப் பொருட்கள். வீட்டு உபயோகப்பொருட்கள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான ஜக். கபோலிங் செட். தூண் பெட்டிகள் மற்றும் சட்டிம் வேலைக்குரிய அனைத்துப் பொருட்கள் மிக்ஸர் மெசின் மற்றும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.



021-228553 077-3754703 A9 வீதி, கிளிநொச்சி




## பொட்டு மீது திரும்பிய பிரபாகரனின் கோபம்



## ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

மேஷம் முதல் மிதுனம் வரை



## கோடரிக் காம்பாகும் மறவன்புலவு சச்சி



## பூமியை நெருங்குகிறார்களா? ஏலியன்கள்


**YARL AHI ICE CREAM**

**யாழ் அகி ஐஸ்கிறீம்**

திருமண நாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும்
வாகன வசதியுடன் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களை அறிந்திட www..yarlahi.com ஐ பார்வையிடவும்.



இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P: 021 791 7585 / 077 023 2328

# உலகம் பலவிதம்...!

**உலகில் அனைத்துப் பகுதிகளிலும் நிலப்பரப்புகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில இடங்கள் நம்மை ஆச்சரியப்படுத்தும், சில இடங்கள் அச்சமூட்டும். சில இடங்களில் அதன் அழகைக் கொஞ்சம் அதிகமாகவே உணர முடியும். அவற்றை நேரில் பார்த்தால் கண்களுக்குத் தெரிவது கற்பனையா இல்லை நிஜமா என்ற சந்தேகம் கூட ஏற்படும். அப்படி இயற்கையாகவே உருவான சில இடங்கள் உலகில் இருக்கின்றன.**




## கானோ கிறிஸ்ரலேஸ

ஆறு என்ன நிறத்தில் ஓடும்? தண்ணீர் என்ன நிறத்தில் இருக்குமோ அதைப் பொறுத்துத்தானே அமையும். ஆனால், இந்த ஆறு அப்படிக் கிடையாது, பல்வேறுநிறங்களில்காட்சியளிக்கும். கொலம்பியாநாட்டில்அமைந்திருக்கிறது இந்த அதிசய ஆறு. இதை 'ஐந்து நிற ஆறு' என்றும் 'திரவ வானவில்' என்றும் அழைக்கிறார்கள். உலகின் அழகான ஆறுகளில் ஒன்றாகவும் இது கருதப்படுகிறது.

ஜூலைமாதம்தொடங்கிநவம்பர்மாதம்வரைக்கும்இந்தஆற்றைவெவ்வேறு நிறங்களில் பார்க்க முடியும். இந்த இடைப்பட்ட காலத்தில் சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள்மற்றும்கறுப்புஎனப்பல்வேறுநிறங்களில்இந்தஆறுதோற்றமளிக்கும். ஆற்றுப்படுகையில் வளரும் Macarenia clavigera என்ற தாவரம்தான் இந்த ஆற்றின் வேறுபட்ட நிறங்களுக்குக் காரணம்.

## அண்டிலோப் செங்குத்துப் பள்ளத்தாக்கு



இந்தஇடத்தின்பெயர்தெரிந்திருக்காவிட்டாலும்இதைநீங்கள்பார்த்திருக்க வாய்ப்புண்டு. உலகில்அதிகம்படம்பிடிக்கப்பட்ட இடங்களில்ஒன்றாகவும்இது இருக்கிறது. அண்டிலோப்செங்குத்துப்பள்ளத்தாக்கு(AntelopeCanyon)என அழைக்கப்படும் இது அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் இருக்கிறது. இங்கே எடுக்கப்படும் புகைப்படங்களைக் கணனிகளிலும் கைபேசிகளிலும் பார்க்க முடியும்.

நீரால் அரிக்கப்பட்டதால் இந்த அமைப்பு உருவாகியிருக்கிறது. குறுகிய பகுதிகளுக்குள்ளே மேலே இருந்து உள்ளே வரும் ஒளியால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கிறது. இந்த இடம் மணற்பாறை வகைபாறைகளால் உருவாகியிருக்கிறது. இங்கே இருக்கும் பாறைகளில் வரி வரியான வடிவங்களைப் பார்க்க முடியும். அமைதியான நிலப்பரப்பாகத் தோற்றமளிக்கும் இங்கே திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும் இருக்கிறது.



## பமுக்கலே

துருக்கிக்குச் சென்றால் கலை நயம் மிக்க பல கட்டடங்களைப் பார்க்க முடியும். அங்கே இயற்கையாகவே அழகாக அமைந்திருக்கிறது பமுக்கலே வெந்நீர் ஊற்று. துருக்கிய மொழியில் இதைப் பருத்திக் கோட்டை என்று அழைக்கிறார்கள். பார்ப்பதற்கு ஏதோ பனிப் பிரதேசத்தில் இருப்பதைப் போல தோற்றமளிக்கிறது. ஆனால், இது குளிரான பகுதி கிடையாது. இந்த நிறத்துக்குக் காரணம் நீரில் இருக்கும் கல்சியம் கார்பனைற் படிவதன் காரணமாக வெண்மையான நிறத்தில் தோற்றமளிக்கிறது. மொத்தம் இந்தப் பகுதியில் 35° செல்சியஸ் முதல் 100° செல்சியஸ் வரை வெப்பநிலை கொண்ட 17 ஊற்றுகள் இருக்கின்றன. யுனெஸ்கோ இதை உலகப் பாரம்பரிய தளமாக அங்கீகரித்துள்ளது.



## சலர் டி உயுனி

நமது ஊரில் உப்பளங்களைப் பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் பார்க்க முடியும். கடல் நீரை நிலத்தில் பாய்ச்சி உப்பானது தயாரிக்கப்படும். ஆனால், பொலிவியாநாட்டில்அமைந்திருக்கும்ஞயடயசனநருலரனெ-யில்மனிதர்கள் யாரும் உப்பை உருவாக்கத் தேவையிருக்காது, இந்த இடம் முழுவதுமே உப்பு கொட்டிக் கிடக்கிறது. சுமார் 10,582 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குப் பரந்து விரிந்து கிடக்கிறது இந்த உப்புப் படுகை.

இதுதான் உலகின் மிகப் பெரிய உப்புப் படுகையாகும், இங்கே சென்று பார்த்தால் கண்களுக்குத் தெரிவதெல்லாம் வெறும் உப்பு மட்டும்தான். இந்தப் பகுதியில் மட்டும் 11 பில்லியன் தொன்களுக்கு மேலாக உப்பு இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மழை பெய்தால் இதன் மேற்பரப்பில் தண்ணீர் தேங்கி நிற்கும்போது இந்த இடம் பிரதிபலிக்கும் தன்மையைப் பெறும். அந்தச்சமயத்தில் இதுதான் உலகின் மிகப்பெரிய இயற்கையான கண்ணாடியாக இருக்கும்.



## பிரமாண்ட பட்டக ஊற்று

அமெரிக்காவில் யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவில் இருக்கிறது இந்த வெப்ப நீஷரூற்று. சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை மற்றும் நீலம் எனப் பல்வேறு நிறங்களில் காட்சியளிப்பதுதான் இதன் சிறப்பம்சம். இது அமெரிக்காவின் மிகப் பெரிய வெப்ப நீரூற்றாகவும் உலகில் உள்ள மூன்றாவது பெரிய வெப்ப நீரூற்றாகவும் இருக்கிறது. சராசரியாக 370 அடி குறுக்களவு கொண்ட இதன் ஆழம் 370 அடியாகும். 70 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நிமிடத்திற்கு 2,100 லீற்றர் நீர் இதிலிருந்து வெளிவருகிறது. இந்தப் பகுதியில் வசிக்கும் நுண்ணுயிரிகள்தாம் இந்த நிறத்துக்குக் காரணமாக இருக்கின்றன.

போரில் புலிகள் தோற்று – கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இழந்தாலும் முள்ளிவாய்க்கால் நோக்கிப் புலிகளே போரை நடத்திச் சென்றனர் எனக் கடந்த வாரம் கூறியிருந்தேன். ஏன் புலிகள் அந்த இடத்தைத் தெரிவு செய்தார்கள் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

இதில் மிக முக்கியமானது, விடுதலைப் புலிகள் அமைப்பில் நிலவிய ஆளணிக் குறைவு. இராணுவத்தின் ஒரு ஸ்குவாட்டை – 12 பேரை எதிர்த்து 4 பேர் கொண்ட புலிகளின் அணியே சண்டையில் ஈடுபட்டது. சிலவேளைகளில் ஒரு பிளாட்டூனை எதிர்த்துக்கூட புலிகளின் நால்வர் கொண்ட அணியே சண்டையிட்டது. நால்வரில் குறைந்தது இருவர் சண்டைக்கு புதியவர்களாக இருந்தனர். எனவே, புலிகள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை தக்க வைக்க வேண்டுமானால் அதிக ஆளணி அவசியம்.

இராணுவத்தின் நிலையோ அப்படியிருக்கவில்லை. பெரும் ஆளணி மற்றும் படைத்துறை சாதனங்களுடன் எதிர்த்து நிற்கும் இராணுவம் தனது வெற்றியைத் தெரிவிக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையே கைப்பற்ற முனைந்தன. புலிகளின் முக்கிய இடங்களுக்கு எத்தகைய இழப்புகளையும் சந்திக்க இராணுவம் தயாராக இருந்தது. இதனால் இராணுவத்தை எதிர்த்து முக்கிய இடங்களைத் தக்கவைப்பது என்பது தேவையற்ற இழப்புகளை ஏற்படுத்துவதுடன் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பது புலிகள் கணக்காக இருந்தது.



இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 100

இதனால் புலிகள் முக்கிய பிரதேசங்களை இழக்கத் தயாராகினர்.

இடங்களை இழக்கும் முடிவால் புலிகளின் தளபதிகள், இரண்டாம் கட்டத் தளபதிகள், போராளிகளுக்கு இடையே பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் நிலவின. தளபதிகள் பின்வாங்கும் உத்தரவை மட்டுமே பிறப்பித்து வந்தார். இது இரண்டாம் நிலைத் தளபதிகள், அணிகளின் தலைவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தின. இது போராளிகளிடையே அதிருப்தியையும் புகைச்சலையும் ஏற்படுத்தியிருந்தன. இந்த இடத்தில் பிரபாகரனின் இராணுவ அறிவின் ஆழம் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

உண்மையில் பிரபாகரன் ஓர் நடமாடும் இராணுவப் பல்கலைக்கழகம். போர் அறிவு குறித்து அவர் எந்த நாட்டு இராணுவப் பாசறையிலும்படிக்கவில்லை. ஆனால் அவர் போடும் போர் திட்டங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளின்



# பொட்டு அம்மான் மீது திரும்பிய பிரபாகரனின் கோபம்

இராணுவத் தளபதிகளுக்குக் கூட மிகுந்த சவாலை அளிக்க வல்லவை. புலிகள் அமைப்பு விஸ்வரூபம் எடுத்ததில் அவரின் இராணுவ அறிவுக்குப் பெரும் பங்குண்டு. இலங்கையில் இருக்கும் எந்த இராணுவத் தளத்தையும் எப்படி அழிக்கலாம், அந்தத் தளத்தில் இருக்கக்கூடிய ஆளணி, படைத்துறை வசதிகள், இவை எப்படி மாற்றமடைகின்றன. அங்கிருக்கும் தளபதிகள் என ஒவ்வொரு விடயத்தையும் உடனுக்குடன் அப்டேட் செய்பவராக இருந்தார்.

அவருடைய எண்ணம் எல்லாம் போர் மீதானதாகவே இருந்தது. போரில் இடைவெளி விழுந்து விட்டால் மீண்டும் எழ முடியாது என்ற நம்பிக்கை எப்போது அவருக்குள் இருந்தது. இதற்கு மட்டுப்பாடு போட்டு, அவ்வப்போது சமாதானம், அரசியல் வழிகளை நோக்கி பிரபாகரனை நடக்க வைத்தவர் அன்ரன் பாலசிங்கம். சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு எதையும் தர மாட்டார்கள், தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு எதையும் செய்ய மாட்டார்கள் என்பது அவருடைய மாறாத எண்ணம். தமிழ் மக்களுக்கு தீர்வு உண்டு என்றால் அது விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தால் மட்டுமே என்று அவர் ஆழமாக நம்பியிருந்தார்.

இறுதிப் போரின் சில கட்டங்களிலேயே அவருக்குப் போரின் போக்குப் புரிந்து விட்டது. தற்போதைக்குப் பின்வாங்குவது என்றும், முக்கிய இடங்களை இழக்கவும் பிரபாகரன் தயாரானார். அதுவும் ஒரு கட்டத்திற்குத்தான் என்பதையும் அவர் நன்கறிந்திருந்தார். ஆபிரிக்க நாட்டில் தஞ்சமடையும் திட்டத்தை புலிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் வழங்கியபோது அதை ஒற்றை வரியில் நிராகரித்தார் என்று சொன்னேன் அல்லவா? அதற்கு மாறான திட்டம் ஒன்றையும் அவர் வைத்திருந்தார் என்றும் நோர்வேயின் பங்களிப்பும் அதற்கு இருந்தது என்றும் கூறினேன் அல்லவா? அந்தத் திட்டம் இதுதான் அமெரிக்கக் கப்பலின் வருகை.

பிரபாகரனின் திட்டம், வெற்றி பெற வேண்டும் என்றால் ஆழமான கடல்பரப்புடன் தொடர்புடைய கடல் தேவை. முல்லைத்தீவு கடல் பரப்பு அதற்குப் பொருத்தமானது என்றாலும், கப்பல் வரும்வரை போர் களத்தை எதிர்கொள்ள பாதுகாப்பான கடற்பரப்பும் தேவை. அதனால்தான் நந்திக் கடலோரத்தையும் அடுத்துள்ள முள்ளிவாய்க்காலையும் புலிகள் தெரிவு செய்தனர். இதனால்தான் அப்பகுதிகளை நோக்கி இறுதிப் போரை அவர்கள் நகர்த்திச் சென்றனர். புலிகள் தனியாகச் சென்றால் இராணுவம் இலகுவாக அவர்களை அழித்து விடும். அதுமட்டுமல்ல மக்களை இராணுவத்திடம் விட்டுச் சென்றால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அங்கிருந்த மக்களை இராணுவம் பலரை கொடுமைப்படுத்தி, கொன்று குவித்திருந்தது. பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியது. இதை விடப் பலமடங்கு குற்றங்களை செய்யும் என்பதும் அவர்களுக்குத் தெரியும் அதனால் மக்களை தம்முடனே அழைத்துச் சென்றார்கள். மக்களும் புலிகளுடன் செல்லவே விரும்பினார்கள்.

இதற்குமுன் இன்னொரு விடயத்தையும் கூறியே ஆகவேண்டும். பிரபாகரன் முள்ளிவாய்க்கால் நோக்கி போரை நகர்த்திச் சென்றபோது காலத்தைத் தாமதிக்கும் வகையில் சில செயற்பாட்டு உத்திகளைக் கையாண்டார். அது அமெரிக்கக் கப்பல் வரும்வரையான காலம். கப்பல் வரும் மக்களையும் – புலிகளையும் காப்பாற்றும் என்ற நம்பிக்கை நோர்வே தரப்பால் பிரபாகரனுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவரை புலிகளைத் தாக்குப்பிடிக்கும்படியும் கூறப்பட்டது.

இதனிடையே சில தாக்குதல் உத்திகளை செய்தும் அவை எதிர்பார்த்த வெற்றிகளைப் புலிகளுக்குக் கொடுக்கவில்லை. இராணுவ விமான நிலையம் மீதான வான்புலிகளின் விமானத் தாக்குதல், கல்மடுக்குளம் தாக்குதல் என்வற்றை இத்தகைய தோல்வித் தாக்குதல்களாகக் கூறலாம். இந்த இரு தாக்குதல்களிலும் சரியானபடி இலக்குகள் தாக்கப்பட்டிருந்தால் இராணுவம் அவ்வளவு வேகமாக புலிகளை அணுகியிராது. குறைந்தது ஓரிரு ஆண்டுகளாவது தாக்குதலை நிறுத்தும் நிலைக்கு இராணுவம் தள்ளப்பட்டிருக்கும்.

இந்தத் தாக்குதலுடன் கரும்புலித் தாக்குதல் ஒன்றுக்கும் புலிகள் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். கரும்புலிகளாகச் சென்ற மூவர் இராணுவத்திடம் சரணடைந்தமையையும், தோற்கப் போகும் சண்டைக்கு நான் ஏன் வெடிக் வேண்டும் எனக் கரும்புலியாகப் போன ஒருவர் கேட்டுவிட்டு தப்பிச் சென்றதாலும் பிரபாகரன் போட்ட போர் வியூகங்கள் தரைமட்டமாகின. இதனால் கரும்புலிகளுக்குப் பொறுப்பான பொட்டு அம்மான் மீது பிரபாகரனின் கோபம் திரும்பியது.

(தொடரும்)





# சாம்பல், கறுப்பாக உருமாற உருவெடுக்கும் வெள்ளை அறிக்கை

மு.திருநாவுக்கரசு

**1968** ஆம் ஆண்டு மாவட்ட சபை மசோதாவை சட்டமாக்காமல் அதை வெள்ளை அறிக்கையாக மாற்றிப் பின்பு தீயிட்டுச் சாம்பல், கறுப்பு அறிக்கையாக மாற்றிய கதையையும், தமிழரசுக் கட்சியை 5 ஆண்டுகளாக ஏமாற்றித் தம் ஆட்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த ஐ.தே.கவின் திறமையையும் இங்கு மீண்டும் மீட்டு ஒப்பிட்டுப் பார்க்குமாறு இன்றைய அரசியல் போக்கு ஆணையிடுகிறது.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தலைமையிலான அமைச்சர் குழு கடந்த 18ஆம் தேதி தனித் தனியே மல்வத்த பீடாதிபதியையும், அஷ்கிரிய பீடாதிபதியையும் சந்தித்தது. உத்தேச அரசியல் யாப்பு நகல் தொடர்பான விளக்கங்களை பீடாதிபதிகளுக்கு அளிப்பதற்கான சந்திப்பாக இது அமைந்தது. நாடாளுமன்றத்தில் பல தரப்பினரதும் கருத்துக்களை அறிந்து பின்பு ஒரு சட்ட வரைவை உருவாக்குவதற்கான ஓர் ஆவணமாக இந்த நிபுணர் குழு அறிக்கை அமைந்துள்ளது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல மல்வத்த பீடாதிபதியிடம் கூறினார். அவர் கூறிய விளக்கத்தைப் பார்க்கும் போது இந்த உத்தேச அரசியல் யாப்பின் நகலானது ஒரு 'வெள்ளை அறிக்கை" நிலைக்கே உரியது என்ற விளக்கத்தைக் கொண்டுள்ளது.

மாவட்ட சபை மசோதாவை 1968 ஆம் ஆண்டு ஒரு வெள்ளை அறிக்கையாக மாற்றிய அனுபவத்தை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ளது. அப்படியே இந்த யாப்பு முன்வரைவு பற்றிய விடயங்களும் ஒரு வெள்ளை அறிக்கை பின்பு சாம்பல், கறுப்பு அறிக்கை என்ற நிலையுடன் தன் ஆயுளை முடித்துக் கொள்ளப் போகிறது என்பது தெளிவாக உள்ளது. 'வெள்ளை அறிக்கை" என்ற பதம் பிரித்தானிய அரசியலில் குறிப்பாக 1922ஆம் ஆண்டிலிருந்து பிரயோகத்திற்கு வந்தது. வெள்ளை அறிக்கை (White Paper), நீல அறிக்கை (Blue Book), பச்சை அறிக்கை (Green Paper) எனப் பல வகை அறிக்கைகள் உள்ளன. அறிக்கையின் முகப்பு அட்டையின் நிறத்தை வைத்தே இவற்றிற்கான பெயர்கள் இடப்பட்டன. அதாவது இத்தகைய நிற அறிக்கைகள் எதுவும் இறுதியானவை அல்ல என்பதே இதன் அடிப்படை உண்மையாகும்.

வெள்ளை அறிக்கை என்பதன் பொருள் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவும், அவர்களது அபிப்பிராயங்களை அறிவதற்குமான ஓர் ஆவணம் என்பதாகும். இந்த அர்த்தத்திற்தான் தற்போது நாடாளு மன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் யாப்பு நகல் உள்ளது என்பதை பீடாதிபதிகளிடம் அமைச்சர் குழு தெரிவித்துள்ளது. அதற்கு மல்வத்த பீடாதிபதி அளித்த பதில் மிகவும் சுவாரஸியமானது. அதாவது இந்த ஆண்டில் பல தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அவையெல்லாம் நடந்து முடிந்த பின்பு இதைப் பற்றி சிந்திக்கலாம். இப்போது அவரசப்பட வேண்டியதில்லை என்பதே அந்தப் பதிலாகும்.

**ஐ.தே.கவின் மூளையாக செயற்பட்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓர் உபாயத்தை வகுத்தார். அதாவது ஏரிக்கரை ஆங்கில பத்திரிகை ஆசிரியர் ஒருவரை அழைத்து தமது அரசாங்கத்திற்கு செல்வநாயகம் நெருக்கடி கொடுப்பதாகவும், அதனை தவிர்ப்பதற்கு பத்திரிகை செயலாற்ற வேண்டுமென்றும் ஜெவர்த்தன அந்த பத்திரிகை ஆசிரியரிடம் கூறினார்.**

இந்த வெள்ளை அறிக்கைகூட சாம்பல் அறிக்கையாக மாறப் போவதற்கான கட்டியமாகவே மேற்படி மல்வத்த பீடாதிபதியின் கருத்து அமைந்துள்ளது. வெள்ளை அறிக்கை தயாரிக்கும் நடைமுறை சார்ந்த ஐ.தே.கவின் அனுபவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. இதற்கு உதாரணமாக மாவட்டசபை மசோதாவை (District Council Bill 1968) மிக வெற்றிகரமாக ஒரு வெள்ளை அறிக்கை வடிவத்தோடு டட்லி சேனநாயக்க அரசாங்கம் கதையை முடித்துக் கொண்டதைக் கூறலாம். ஐ.தே.கவின் இந்த நுணுக்கமான கையாளலையும் அதில் இருந்து தமிழ் மக்கள் கற்றிருக்கக்கூடிய படிப்பினையையும் இங்கு ஒரு கணம் மீட்டு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

1965ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேராமல் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்ற நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்தது. இந்நிலையில் 'தேசிய அரசாங்கம்" என்ற பெயரில் தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஐ.தே.க. ஆட்சி அமைத்தது. அப்போது அதன்பொருட்டு டட்லி – செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு வருடத்திற்குள் மாவட்ட சபைகள் அமைக்கப்படும் என்று ஒப்பந்தமானது. ஆனால் ஒரு வருடம் கடந்தும் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் 1967ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க அரசாங்கத்தை தந்தை செல்வா வற்புறுத்தத் தொடங்கினார். இந்நிலையில் ஐ.தே.கவின் மூளையாக செயற்பட்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓர் உபாயத்தை வகுத்தார். அதாவது ஏரிக்கரை ஆங்கில பத்திரிகை ஆசிரியர் ஒருவரை அழைத்து தமது அரசாங்கத்திற்கு செல்வநாயகம் நெருக்கடி கொடுப்பதாகவும், அதனை தவிர்ப்பதற்கு பத்திரிகை செயலாற்ற வேண்டுமென்றும் ஜெவர்த்தன அந்த பத்திரிகை ஆசிரியரிடம் கூறினார்.

எனவே மாவட்ட சபை சம்பந்தமான மசோதாவை உருவாக்குவது நாட்டைப் பிளப்பதற்கான செயல் என்ற வகையில் அதற்கு எதிர்ப்பு ஏற்படக்கூடியவாறு பத்திரிகையில் கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கமும் தீட்டப்பட வேண்டும் என்று ஜெயவர்த்தன கேட்டுக்கொண்டார். இதன்படி அந்த பத்திரிகை ஆசிரியர் பத்திரிகையில் தனது சதிகார யுத்தத்தை ஆரம்பித்தார். அதைப் பின்பற்றி சிங்களப் பத்திரிகைகளும் நெருப்பைப் பற்றி எரிய வைத்தன. செல்வநாயகத்திடம் இப்பத்திரிகைச் செய்திகளை டட்லி சேனநாயக்க காண்பித்து அதன் அடிப்படையில் மாவட்ட சபை அமைப்பது பற்றிய விடயத்தை ஒத்திப்போட முடிந்தது. எப்படியோ இதன் மூலம் மேலும் ஓர் ஆண்டை வெற்றிகரமாகத் தாண்ட ஐ.தே.கவால் முடிந்தது. மேற்படி தகவல்களை சிங்கள இனத்தவரும், ஆங்கில பத்திரிகையாளரான காமினி நவரட்ண தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது என்னிடம் தெரிவித்திருந்தார்.

ஜெயவர்த்தன அழைத்திருந்த அந்த ஆங்கிலப் பத்திரிகையாளர் தனது நண்பர் என்றும் அவர் கூறிய தகவல்களையே தான் என்னிடம் கூறுகிறார் என்றும் காமினி நவரட்ண தெரிவித்தார். இதன் பின்பு தொடர்ந்தும் செல்வநாயகத்தால் அமைதி காக்க முடியாது இருந்தது. இந்நிலையில் 1968ஆம் ஆண்டு மாவட்டசபை மசோதாவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐ.தே.க. ஒப்புக்கொண்டது. ஆனாலும் அதனை ஒரு வெள்ளை அறிக்கையாக குறுக்கி இறுதியில் ஐ.தே.க. அதற்கு சமாதி கட்டியது. இதுபற்றி சற்று விரிவாக நோக்க வேண்டியது அவசியம்.

தமிழரசுக் கட்சியில் தந்தை செல்வாவின் மூளையாக ஆரம்ப காலத்தில் செயற்பட்டவர் கோப்பாய் கோமான் என்று அழைக்கப்படும் கு.வன்னியசிங்கம். அதாவது கொழும்பை மையமாகக் கொண்ட செல்வாவிற்கு தமிழ் மக்களின் வாழ்வோடு பரீட்சயமான ஒரு மூளைசாலி அவசியப்பட்டது. அது கு.வன்னியசிங்கமாக அமைந்தார். வன்னியசிங்கத்தின் திடீர் மரணத்தோடு அந்த இடம் வெற்றிடமானது.

(05ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கட்சிகள் சாதிக்கப் போவது என்ன?

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை விரைவில் நடத்தும் முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார். தேர்தலுக்கான சம்மதத்தைப் பெற அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் அவர், வெகுவிரைவில் சந்திப்பார் என்றும் தெரிகிறது. மேலும், மாகாண சபைகளுக்கான தேர்தலை விகிதாசார தேர்தல் முறையிலேயே நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ஒரே நாளில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடக்கக்கூடும். தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளுமே தயார். வடக்கு மாகாண சபையில் களமிறக்குவதற்குக் கவர்ச்சிகரமான வேட்பாளர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலை விரிக்கத் தொடங்கிவிட்டது.

புதிதாகக் கட்சி ஆரம்பித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் தமிழ் மக்கள் கூட்டணியை பலப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். அவரது கூட்டணியில் சேர்வதற்கு சுரேஷ், அனந்தி மற்றும் சில தனியான உறுப்பினர்கள் சமிக்ஞை காட்டியுள்ளனர். சேர்வதா? இல்லையா? என்ற குழப்பத்தில் இருந்து கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்னமும் வெளியில் வரவில்லை.

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் - வாழ்வுக்காகவும் ஒன்றாக ஒலிக்க வேண்டிய தமிழ்த் தேசிய மைய அரசியல் கட்சிகளின் குரல் இலாபங்களை நோக்காகக் கொண்டு தனித் தனியாகவே ஒலிக்கின்றன. தேர்தல் சலுகைகளுக்காக கூட்டணி சேரத் துடிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு இலாபங்களை மட்டுமே பார்க்கவே இந்தக் கட்சிகள் முனைகின்றன. இதனால் ஓரணியில் ஒன்றாக ஒலிக்க வேண்டிய தமிழருக்கான குரல் இத்தேர்தலில் தனித் தனியே ஒலிக்கப் போகின்றன.

வடக்கில் வெற்றி வாய்ப்பு யாருக்கு என்ற போட்டியில் தமிழ்த் தேசிய மைய அரசியல் கட்சிகளில் ஒன்று ஆட்சியமைக்கும் சூழல் அமையாலாம். அப்படி ஒரு சூழல் அமைந்தாலும் இத்தேர்தலில் அதிக இலாபம் பார்க்கப் போவது சிங்கள - பௌத்த பேரினவாதக் கட்சிகளும், அதனுடன் ஒட்டிக் கொண்டுள்ள தமிழ் உதிரிக் கட்சிகளுமாகத்தான் இருக்கப் போகின்றன. எனவே தமிழ் மக்களின் நலன் கருதிய கூட்டமைப்பின் - கூட்டணியின் ஒன்றிணைவே இப்போதைய தேவை. அதற்கான சாத்தியமான வழிகள் சம்பந்தன் - விக்னேஸ்வரன் என்ற இரு பெரும்தலைவர்களிடமும் இன்னமும் உள்ளன.

## சாம்பல்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு அந்த இடத்தை நிரப்பக்கூடிய செல்வாவின் மூளையாகச் செயற்பட்டவர் காவலூர் நவரத்தினமாவர். 1965ஆம் ஆண்டுவரை அவரே அந்தப் பாத்திரத்தை பெரிதும் வகித்தார்.

1962ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் சம்பந்தமான திட்டமிடல், பின்பு அதனை முடிவிற்குக் கொண்டுவருதல் தொடர்பாக அனைத்து வகையிலும் செல்வநாயகத்தின் மூளையாக நவரத்தினம் செயற்பட்டார். ஆனால் 1965ஆம் ஆண்டு ஒரு புது இரசாயன மாற்றம் ஏற்பட்டது. 1965ஆம் ஆண்டோடு செல்வநாயகத்தின் மூளையாக கொழும்பை மையமாகக் கொண்ட மு.திருச்செல்வம் பாத்திரம் வகிக்கலானார். அதனோடு நவரத்தினத்தின் பாத்திரத்திற்கு முடிவு கட்டப்பட்டது.

அக்காலகட்ட அரசியல் அனுபங்களை அறிந்து கொள்வதற்காக 1980ஆம் ஆண்டின் மத்தியில் பல ஞாயிறு நாட்களில் காவலூர் நவரத்தினத்தை சந்தித்துள்ளேன். அவர் பல வியப்பிற்குரிய அனுபவங்களை என்னிடம் தெரிவித்துள்ளார். ஏரிக்கரை பத்திரிகை அலுவலகத்தில் மிகவும் இரகசியமாகப் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்து 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கான நடவடிக்கைகள் நிகழ்ந்ததைப் பற்றி வர்ணித்தார். அப்போது டட்லி சேனநாயக்கவிடமும், ஜெவர்த்தனவிடமும் காணப்பட்ட அவசரம் அரசாங்கம் அமைப்பது பற்றியதாக இருந்ததே தவிர இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றிய இதயசுத்தி வெளிப்படவில்லை என்று கூறினார்.

அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்த நகலில் இருக்கும் குறைகள் பல சுட்டிக் காட்டப்பட்ட போது நீல மையால் எழுதப்பட்ட அந்த நகலில் டட்லி சேனநாயக்க தனது பச்சை மை பேனாவால் சில திருத்தங்களை மேற்கொணடார் என்று கூறிக் கையால் எழுத்தப்பட்ட அந்த மூல அறிக்கையை அவர் என்னிடம் காண்பித்தார்.

யாழ். பல்கலைக்கழக அருங்காப்பகத்தில் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு அந்த மூல ஆவணத்தை தருமாறு அவரிடம் நான் வேண்டிய போதிலும் அவர் அதனை ஒப்படைக்க மறுத்தார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதில் எந்தவிதமான அக்கறையையும் டட்லி சேனநாயக்கவோ, ஜெயவர்த்தனவோ பின்பு காண்பிக்கவில்லை என்று அவர் கூறியதுடன் கூடவே மு.திருச்செல்வம் சம்பந்தமாக பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் என்னிடம் விபரித்தார்.

அவை இங்கு முக்கியமல்ல.

அதாவது ஆரம்பத்தில் இதனோடு தொடர்புடைய நவரத்தினத்தின் பட்டறிவு இங்கு கருத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடியது. இதன்பின்பு மேற்கூறப்பட்டவாறு 1968 ஆம் ஆண்டு வரை செல்வநாயகத்தை ஏமாற்றிவிட்டு இறுதியாக 1968ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி மாவட்ட சபை வெள்ளை அறிக்கையை அமைச்சர் மு.திருச்செல்வம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக" இந்த வெள்ளை அறிக்கை வெளிவந்தது. டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் இருந்து அதிக தூரம் விலகியதாக மாவட்ட சபை மசோதா தயாரிக்கப்பட்டது.

இறுதியில் ஒரு வெள்ளை அறிக்கையாகவே 1968 யூன் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது 8ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவரான திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான எதிர்க்கட்சியினர் வெள்ளை அறிக்கை நகலை துண்டு துண்டாக கிழித்து நாடாளுமன்றத்தில் பறக்கவிட்டனர்.

மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான வு.டீ.தென்னக்கோன் ஒரு நகலை தீயிட்டுக் கொளுத்தினார். இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் அனைவரும் நாடாளுமன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்து வெளியே பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அந்த நகல்களை எரித்துக் கோஷமிட்டனர். அப்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முன்னிலையில் இந்த காட்சிகள் அரங்கேறின. அத்தோடு வெள்ளை அறிக்கை சாம்பல், கறுப்பு அறிக்கையாக மாறியது. அதன் கதையும் முடிந்தது.

இப்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தலைமையிலான குழுவினரும் பீடாதிபதிகளைச் சந்தித்து அவர்களுக்கு அளித்திருக்கும் விளக்கம் மேற்படி 1968ஆம் ஆண்டு ஐ.தே.கவின் வெள்ளை அறிக்கையை நினைவூட்டுகிறது.

அப்படி என்றால் இப்போது வெள்ளை அறிக்கையாக உருமாறும் இந்த உத்தேச அரசியல் நகல் யாப்பு மேலும் சாம்பல், கறுப்பு அறிக்கை ஆவதற்குரிய அடுத்த கட்டத்திற்காக காத்திருக்கிறதே உண்மை. மஹாநாயக்கர்களின் அனுமதி பெற்றே புதிய அரசியல் அமைப்பை தயாரிப்போம் என்று ஐ.தே.கவின் செயலாளரும் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இதனை மல்வத்த பீடாதிபதியின் மேற்படி பதிலோடு இணைத்துப் பார்த்தால் வெள்ளை அறிக்கைக்கான சமாதி கண்ணில் தெரியும்.

## பூமியை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையிலேயே ஏலியன்கள் அனுப்பிய சமிக்ஞைகளாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் விண்வெளி ஆராய்ச்சிகளில் மைல்கல்லாக நின்ற நம்மோடு வாழ்ந்த சமகால மேதாவி ஒருவர் சொன்னதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.


"ஏலியன்கள் பூமிக்கு வரவேண்டுமென்று நாம் ஆசைப்படுவது ஆபத்தானது. அவர்கள் வருவது அமெரிக்காவுக்குச் சென்ற கொலம்பஸ் கதையாகப் போகத்தான் வாய்ப்புகள் அதிகம். அவர் அங்கு கால் வைத்தது அப்பகுதியின் சொந்தக்காரர்களான பூர்வகுடி அமெரிக்கர்களுக்கு நல்லது செய்யவில்லை. அப்படித்தான் நம் உலகில் ஏலியன்களின் வருகையும் அமையும்"

இதைச் சொன்னது யார் தெரியுமா? புகழ்பெற்ற விஞ்ஞானி ஸ்ரீபன் ஹக்கிங். வேற்றுக்கிரகவாசிகளைத் தேடி நாம் சமிக்ஞைகளை அனுப்புவது அவ்வளவு நல்லதல்ல என்று அவர் எச்சரித்தார். அது மனித இனத்தின் இருப்பையே ஆபத்துக்கு உள்ளாக்கும் வாய்ப்புகள்தாம் அதிகம். தொலைதூரத்திலிருந்து வருபவர்கள் என்ன நோக்கத்தில் வருவார்கள் என்பது நமக்குத் தெரியாது.

அதுமட்டுமல்ல. நம் சமிக்ஞைகளைக் கண்டுபிடித்து நம் உலகுக்கு அவர்களால் வரமுடியும் என்றால், அவர்கள் நம்மைவிடத் தொழில்நுட்பங்களில் பல மடங்கு முன்னேறியவர்களாகவே இருப்பார்கள். அப்படியொரு கூட்டத்தை எதிர்த்து நிற்கும் அளவுக்கு நாம் இன்னமும் வளரவில்லை. அப்படிச் செய்வது ஆபத்தை வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்பதற்குச் சமம் என்றார் ஹக்கிங்.

பூமியின் வளங்கள் ஏற்கெனவே குறைந்து கொண்டிருக்கின்றன. இங்கு வாழ்பவர்களுக்கே பற்றாக்குறை ஏற்பட்டுக் கொண்டிருக்க, புதிதாக வருபவர்கள் இப்படிப்பட்ட பற்றாக்குறையான உலகை எப்படிப் பார்ப்பார்கள் என்பது நமக்குத் தெரியாது. இதே நிலைதான் பேரண்டத்தின் எந்தப் பகுதியில் எந்த வகை நாகரிகம் வாழ்ந்தாலும் இருக்குமென்று நினைக்கிறேன். இயற்கை ஓரளவுக்குத்தானே கொடுத்திருக்கிறது. அந்த அளவு எப்போதோ எல்லை மீறியிருக்க மற்ற கிரகங்களில் மட்டும் அப்படியே வைத்திருப்பார்கள் என்று நினைக்கத் தோன்றவில்லை.

அப்படிப்பட்டவர்கள் இங்கு வரும்போது நம்மைப் போலவே, மனிதர்கள் மற்ற நாடுகளில் கிடைப்பதைச் சுரண்ட நினைப்பது போலவே அவர்களும் நினைக்க மாட்டார்களென்று என்ன நிச்சயம்? அப்படியொரு சூழல் வரக்கூடாது என்றுதான் ஹக்கிங் விரும்பினார். அனைத்து ஆராய்ச்சிகளும் அந்த மேதையின் கருத்தை நோக்கியதாகவே இருந்தால் நன்றாகத்தான் இருக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.



# #10 வருட சவால் “பேஸ்புக்” விரித்த வலையா?

சமூக வலைதளங்களில், அவ்வப்போது ஏதாவது ஒரு விடயம் ‘ட்ரெண்ட்’ ஆகிக் கொண்டே இருக்கும். அதுபோல, அண்மை நாட்களாக உலகம் முழுவதும் தாறுமாறாக வைரலானது #10 வருட சவால் #10 year challenge. அண்மை சவால்களில் இது கொஞ்சம் வித்தியாசமானதும்கூட. எப்போதும் இதுபோன்ற விடயங்களில் ஒருவர் ஏதாவது ஒன்றைச் செய்துகாட்டி, மற்றவர்களும் அதைப்போல செய்ய வேண்டும் என சவால் விடுவார். எடுத்துக்காட்டாக, சமீபத்தில் பேர்ட் பொக்ஸ் சலஞ்ச், கடந்த வருடத்தில் கிகி சலஞ்ச், அதற்கு முன்னர் ஐஸ் பக்கெட் சலஞ்ச் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றில் சில சவால்கள் ஆபத்தானவையாகவும் இருப்பதுண்டு. ஆனால், 10 வருட சவால் அப்படிக் கிடையாது. மேலும், இது செய்வதற்கு மிகவும் எளிமையான சவால். இதில் போட்டோதான் முக்கியமான விடயம். இன்றிலிருந்து பத்து வருடங்களுக்கு முன்னால் நீங்கள் எப்படி இருந்தீர்கள் என்பதை உலகுக்குக் காட்ட வேண்டும். அதாவது, 2009 இல் எடுக்கப்பட்ட போட்டோவையும், 2019 இல் எடுத்த போட்டோவையும் ஒன்றாக இணைத்து, அதைப் பதிவிட்டால் அவ்வளவுதான் இந்தச் சவால் முடிந்தது. இதுபோன்ற சவால்கள் ஏதாவது ஒரு சர்ச்சையில் சிக்கிவிடுவது வழக்கம். அதற்கு 10 வருட சவாலும் விதி விலக்கல்ல.

முதன் முதலில் இந்தச் சவாலை யார் ஆரம்பித்து வைத்தார்கள் எனத் தெரியவில்லை. ஆனால், பல பிரபலங்களும் மக்களும் இதில் ஆர்வம் காட்டியதால், உலகம் முழுவதும் வேகமாகப் பரவியது. பழைய நினைவுகளை அசைபோட யாருக்குத்தான் ஆசை இல்லை. கூடவே, 10 வருடங்களுக்கு முன்னால் எடுத்த போட்டோவும் கையில் இருந்தால் மட்டும் போதுமே. எனவே, பெரும்பாலானோர் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார்கள். எல்லாமே நல்ல படியாகத்தான் போய்க்கொண்டிருந்தது - அதாவது கேட் ஓ நெய்ல் (Kate O’Neil) என்பவர், அவரது கருத்தைத் தெரிவிக்கும் வரைக்கும்.

எழுத்தாளரான இவர், Tech Humanist, Pixels and Places உட்பட சில புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்நிலையில், 10 வருட சவால் தொடர்பாக Wired என்ற இதழின் இணையதளப் பக்கத்தில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதில், பேஸ்புக் நிறுவனமே இந்த 10 வருட சவாலை உருவாக்கியதாகவும், அதன் facial recognition தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக இதைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது எனவும் கருத்து தெரிவித்திருந்தார்.

“உங்களிடம் இருக்கும் ஒரு முகத்தைக் கண்டறியும் அமைப்பு ஒன்றுக்குப் பயிற்சி தர விரும்புகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். குறிப்பாக ஒருவரின் வயதாகும் தன்மையைப் பரிசோதிக்க விரும்பினால், அதற்கு இதைவிடச் சிறப்பான ஒன்று தேவைப்படுமா” என்று யோசித்துப் பாருங்கள் எனக் கேட்டிருந்தார் கேட் ஓ நெய்ல். மேலும், இதன் மூலம் சேகரிக்கப்படும் தரவுகளை பேஸ்புக் வியாபார நோக்கில் பயன்படுத்தக் கூடும் எனவும், சந்தேகம் வெளியிட்டிருந்தார். அவரின் கட்டுரை வெளியான பின்னர், இந்த 10 வருட சவால் விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

ஒரு சாதாரண போட்டோவுக்குப் பின்னால் இப்படி ஒரு விடயம் இருக்கலாம் என மக்களுக்கு அப்போதுதான் தெரியவந்தது. எனவே, உடனடியாக பேஸ்புக்கின் இந்தச் சூழ்ச்சியை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்பினார்கள். இந்தத் தகவலை பேஸ்புக்கில் பதிவிட்டும், வட்ஸ் - அப்பில் அனுப்பியும் மற்றவர்களை எச்சரிக்கத் தொடங்கினார்கள்.

அண்மை நாட்களில் அதிகமாக அடி வாங்கிய சமூக வலைதளம் பேஸ்புக்தான். கடந்த வருட தொடக்கத்தில், கேம்பிரிட்ஜ் அனலிடிகா விவகாரத்தில் தொடங்கியது பேஸ்புக்கின் சறுக்கல். கடந்த சில வருடங்களில் பேஸ்புக்கிற்கு கெட்ட பெயரை வாங்கிக்கொடுத்த அதன் தாக்கம், இன்று வரை நீடிக்கிறது. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, பாதுகாப்புத் தொடர்பாக எந்தப் பிரச்சினை எழுந்தாலும் பேஸ்புக்கிற்கும் அதில் சம்பந்தம் இருக்குமோ என நினைக்கவும் தவறவில்லை உலகம்.

இதற்கு முன்பு இப்படிக் குற்றச்சாட்டுகள் வைக்கப்படும்போதெல்லாம் கொஞ்சம் அடக்கியே வாசித்த பேஸ்புக், இந்த முறை அப்படி இருக்கவில்லை. “இது, பயனாளர்களால் உருவாக்கப்பட்டது, அவர்களால்தான் வைரல்



ஆனது. பேஸ்புக், இந்த ட்ரெண்டைத் தொடங்கி வைக்கவில்லை. இதில் பயன்படுத்தப்படும் போட்டோக்கள் பேஸ்புக்கில் ஏற்கனவே இருப்பவைதான். மேலும் facial recognition தொழில்நுட்பத்தை தேவைப்பட்டால் செயற்பாட்டிலும் அல்லது நிறுத்திவைக்கவும் கொடுக்கப்பட்டுள்ள வசதியை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை நினைவுபடுத்துகிறோம்” என்று பேஸ்புக் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் பேஸ்புக், முன்னெப்போதும் இல்லாத வகையில் கோபப்படுவதற்கும் காரணம் இருக்கிறது. ஏனென்றால், இந்த facial recognition தொழில்நுட்பத்தை பேஸ்புக் மட்டுமே பயன்படுத்தவில்லை. கூகுள் உட்பட பல முன்னணி நிறுவனங்கள் பல்வேறு பயன்பாட்டிற்காக இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. பேஸ்புக் தவிர்த்து மற்ற சமூக வலைத்தளங்களிலும் இந்தத் தொழில்நுட்பம் பயன்பாட்டில்தான் இருக்கிறது. இந்த 10 வருட சவால் பேஸ்புக்கில் மட்டுமின்றி ருவிற்றர், இன்ஸ்டாகிராம் என அனைத்திலும் வைரல். எனவே, இந்த10 வருட சவாலைப் பொறுத்தவரை தங்களை மட்டுமே குற்றம் சாட்டுவது சரியாக இருக்காது என நினைக்கிறது பேஸ்புக். கிட்டத்தட்ட அதுதான் உண்மை நிலையும்கூட. எடுத்துக்காட்டாக, ஸ்மார்ட்போனில் இருக்கும் பேஸ் அன்லொக் வசதிகூட ஒரு வகை முகத்தைக் கண்டறியும் தொழில்நுட்பம்தான். கூகுள்கூட போட்டோக்களை ஒருங்கிணைக்க ஸ்மார்ட்போன்களில் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகிறது. எனவே, சமூக வலை தளங்களைப் பயன்படுத்துபவர்கள் facial recognition தொழில்நுட்பத்தை முற்றிலுமாகத் தவிர்ப்பது என்பது கிட்டத்தட்ட சாத்தியமில்லாத ஒன்று.

ஒரு வேளை, பேஸ்புக் உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அதை வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் என்று நீங்கள் நினைத்தால், அது மற்ற சமூக வலைதளங்களுக்கும் பொருந்தக்கூடியதே. எனவே, இந்தச் சவாலில் விருப்பப்பட்டால் பங்கேற்லாம். இல்லையென்றால் ஒதுங்கிக்கொள்ளலாம். ஆனால், பலர் கூறுவதைப் போல இதற்குப் பின்னால் பயப்படும் அளவுக்குக் காரணங்கள் எதுவும் இல்லை. இதைத் தகவல் திருட்டு என்று நினைத்து அதைத் தவிர்க்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், அதற்கான வழி ஒன்றுதான். அதற்கு, தொடக்கத்தில் இருந்தே சமூக வலைதளங்களின் பக்கமே எட்டிக்கூட பார்க்காதவர்களாக இருந்தால் மட்டுமே அதற்கான சாத்தியம் உண்டு.

பேஸ்புக், உங்களுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டுதான் இருக்கிறது என்பது உண்மை. இதில் பங்கேற்கா தவர்கள்கூட பேஸ்புக்கில் போட்டோக்களை பதிவேற்றுகிறார்கள். எப்படி இருந்தாலும் பேஸ் புக்கிடம் உங்களது போட்டோவை நீங்கள்தான் அளிக்கிறீர்களே தவிர, பேஸ்புக் வற்புறுத்தி வாங்குவதில்லை. ஒரு வேளை உங்களது தனியு ரிமை பாதிக்கப்படும் என நீங்கள் சந்தேகப்படலாம். அப்படி இருந்தால், பேஸ்புக்கில் இருந்து வெளியே றப்போகிறீர்களா அல்லது அது தெரிந்தும் அங் கேயே இருக்கப்போகிறீர்களா என்பதுதான் உங்க ளுக்கு முன்னால் வைக்கப்படும் நிஜமான சவால்!

# மதம் பிடிக்கும் அரசியல் களம்

சேந்தன்



பொதுவாகவே இலங்கை அரசியலில் பௌத்த மதம் ஏற்படுத்திய பின்னடைவுகள் எண்ணிலடங்காதவை. இலங்கை வரலாற்றில் கறை படிந்த பக்கங்களில் எல்லாம் பௌத்த குருமார்களின் பங்களிப்புகள் துல்லியமாகப் பதியப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு அடுத்த பெரும்பான்மையினராகக் காணப்படும் தமிழ் குடிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பல இனவிரோதச் செயல்களை முன்னின்று நடத்திய பெருமை பௌத்த குருமார்களையும் சாரும். அவற்றின் தாக்கம் இன்றும் தொடர்கின்றன. அவை நாட்டின் இறைமையையும், பொருளாதார அபிவிருத்தியையும் மட்டுமல்ல சிங்கள பௌத்த மக்களின் நலன்களையும் பாதித்திருக்கிறது.

நல்லிணக்கத்தைப் பேணி ஒரு கூட்டு முயற்சியாக எடுக்கப்பட வேண்டிய பல பொதுசனத் திட்டங்கள் கிடப்பிடல் கிடப்பதற்கு இந்த மத ரீதியான தலையீடுகளும் காரணமாக உள்ளன. இலங்கை அரசியலில் மதம் தலையிடாது இருந்திருக்குமேயானால் உள்நாட்டு பிரச்சினையாகக் காணப்படும் இனமோதல்கள் என்றோ முடிவுக்கு வந்திருக்கும். ஏற்ப்படுத்தப்படுகின்ற நல்லிணக்க முயற்சிகளும், அரசியல் தீர்வுக்கான ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்படாது இருப்பதற்குக் காரணம் என சிங்கள பௌத்த குருமார்களையும், பௌத்த பீடங்களையுமே முக்கியமாகச் எனவே இத்தகைய பௌத்த சமயப் பிரநிதித்துவதை எடுத்துப் பார்த்தோமானால் அவை முழு இலங்கைக்கான பௌத்த மக்களின் பிரநிதித்துவமாக அல்லாது ஒரு குறிப்பிட்ட அரசியல் பலம் வாய்ந்த குழுவாகவே அதனைக் காணலாம்.

அவர்கள் அரசியல் நோக்கத் துக்காகவும், அவ்வப்போது அது போன்ற நல்ல நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கத் தேவையான கருவிகளாகவும் உபயோகிக்கப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை காணலாம். அவர்களுக்கு மத ரீதியான அரசியல் அங்கீகாரத்தைக் கொடுத்து அதனூடாக அரசினால் வழங்கப்படும் சுகபோகங்களை அனுபவிக்கக் கூடிய வசதி வாயப்புகளெல்லாம் வழங்கப்பட்டு அரசியல் கட்சிகளும், அரசியலாளர்களும், அரசும் தமது கைப் பொம்மைகளாக அவர்களை பயன்படுத்திக் கொள்கின்றன.

இத்தகைய போக்கின் அடிப்படையிலேயே ஜனாதிபதி ஆலோசகர்களாகவும் மத குருமார்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் எல்லோரும் ஜனாதிபதிக்கு மத நலன்கள் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதைத் தவிர்த்து அரசியல் ஆலோசகர்களாகவும், அரச நியமனங்களைப் பெற்றுக் கொடுக்கும் முகவர்களாகவும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றனர். அவர்களின் முக்கிய நோக்காகக் காணப்படுவது தம் சார்ந்த நலன்களே அன்றி வேறல்ல.

கடந்த வார சில அரசியல் நிகழ்வுகள் இதனை மீண்டும் மீண்டும் உறுதி செய்கின்ற வகையில் நடைபெற்றிருக்கின்றன. இந்து மத பீடங்கள், குருக்கள் பேரவை, இந்து இளைஞர் அமைப்பு என்றெல்லாம் இருப்பவர்கள் தம்மை இலங்கத் தீவின் ஏகோபித்த இந்துப் பிரநிதிகளாகக் காட்டியவாறு தமது செயற்திட்டங்களையும், அரசியல் நாடகங்களையும் முன்னெடுத்திருக்கின்றன. ஒரு நல்ல விடயத்திற்காக இவர்கள் இத்தகைய போக்கைக் கையாண்டிருப்பின் அது வரவேற்கத்தக்கதே. ஆனால் இவர்கள் எடுத்துக் கொண்ட போராட்டம் பல வழிகளிலும் தமிழ் மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் அவமதித்து அராஜக உணர்வோடு செயற்பட்டு, பல இந்து ஆலயங்களை அழித்து, பல மசூதிகளை உடைத்துச் செயற்பட்ட ஒரு இன மதவாதியாகவும், நஞ்சனாகக் காணப்படும் ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டு குற்றமிழைத்துத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு பௌத்த துறவியை விடுதலை செய்ய வேண்டும். ஜனாதிபதி அவர் மீது கருணை காட்ட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு போரட்டத்தை முன்னெடுத்து அது தொடர்பான மகஜரைக் கையளித்து ஊடகங்களுக்கும் செய்தி வழங்கியிருக்கின்றன.

நாட்டில் பல பாகங்களிலுள்ள கோயில்களிலும் தற்போது மத அனுட்டானங்களும், மத சம்பந்தமான முன்னேற்றச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதைவிட அங்கு ஒருவித அரசியல் புகுந்திருப்பதை இந்துக்கள் நன்கு அறிவர். அதற்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் இந்து மதவாதிகளும், இந்து மத குருமார்களுமே. பல கிராமங்களில் மக்களைப் பிரித்தாளும் சக்தியாகவும் இந்து மத குருமார்கள் செயற்படுவதையிட்டுப் பலர் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

எனவே மதங்கள் மதங்களாக இல்லாத போக்கே தற்போது காணப்படுகிறது. மதவாதிகள் பெரும்பாலோனோர் அரசியல் பின்னனிகளைக் கொண்டவர்களாகவும், அரசியல் செயற்பாட்டாளர்களாகவும், அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகவும் காணப்படுகின்றனர். இதற்கு நல்ல உதாரணமாக அண்மையில் நடைபெற்ற சம்பவத்தைச் சொல்லலாம். வட மாகாணத்தில் புதிய ஆளுநர் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றபோது அழையா விருந்தாளியாக வந்த இந்துமத குருக்கள் ஒருவர் தனது தோற்றத்தை முதலீடாகக் கொண்டு பாதுகாப்பையும் கடந்து ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி, காளாஞ்சி வழங்கிவிட்டுத் தனக்கு அழைப்பு விடுக்காதது பற்றிச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

இந்த நிகழ்வு எதைக் குறித்து நிற்கிறது. மதகுரு மதத்தின் மீது கொண்ட பற்றா? இல்லை ஆளுநர் மூலம் மதத்தை வளர்க்க மேற்கொண்ட செயற்பாடா? இல்லை மக்கள் நல செயற்பாடா? இல்லை. இவர்கள் பிரபலங்களின் அறிமுகத்தை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையா? இவ்வாறான சில விடயங்கள்தான் மதத் தலைவர்களின் மூலதனம். இது இந்து மத குருமாருக்கு மட்டுமல்ல பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என அனைத்து மதங்களின் குருமார்களுக்கும் பொருந்தும்.

இலங்கையில் நல்லெண்ணங்கள் உருவாக வேண்டுமெனில் மதங்களின் அரசியல் பிரவேசத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும். மத குருமார்களும், பீடாதிபதிகளும், மதச் செயற்பாட்டாளர்களும் அரசியல் மேடைகளை அலங்கரிப்பதையும், ஆசி வழங்கவென மேடைகளுக்கு அழைக்கப்படுவதில் இருந்தும் முதலில் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக இந்து மதத் தலைவர்களையும் மத பீடங்களையும் மக்கள் கேட்டுக் கொள்வது ஒரேஒரு விடயம்தான். உங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகவும், உங்கள் குழு சார்ந்த நலன்களுக்காகவும் மதத்தை அடைவு வைப்பதை நிறுத்துங்கள். இதைத் தற்போது ஒரு தாழ்மையான வேண்டுகோளாக விடுக்கின்றனர். இதுபோன்ற நடவடிக்கைகள் ஒரு தனிப்பட்ட நலனுக்கான அரசியல் செயற்பாடாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் காலப்போக்கில் இவ் வேண்டுகோள் ஒரு கண்டனமாகக் கூட எழுவதற்கு வாய்ப்பு உள்ளது என்ற கசப்பான உண்மையை மதத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஓர் அநியாயவாதியை – காவிக்குள் புகுந்துள்ள அட்டூழியவாதியை ஆதரிக்க போராட்டத்தையும், செயற்பாடுகளையும் முன்னெடுக்கக்கூடாது. அவரால் ஒரு இனம் மட்டுமல்ல பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல மதத் தலங்கள் போன்றே நாட்டின் உயரிய அம்சமான நீதிமன்றத்தையே அவமதித்தார். அதற்காகவே நீதித்துறை அவருக்குத் தண்டனை வழங்கியது. எனவே அவரின் தண்டனையை இரத்துச் செய்வதற்கு ஒரு மதத்தின் நாமத்தை நீங்கள் உபயோகிப்பது முறையல்ல. அதுவும் ஒட்டு மொத்த இலங்கை இந்து மக்கள் வேண்டுகோளாக முன்வைக்கும் கோரிக்கையையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

நீங்கள் மத சம்பந்தமான விடயங்களில் பங்குபற்றவும், அது தொடர்பான நலன்களை முன்னெடுக்குவுமே இந்து சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இந்து மத்தின் பிரநிதிகளாகவும், அதை வைத்து வியாபாரம் செய்யவும் இந்துக்கள் உங்களை ஒரு போதும் அனுமதிக்கவில்லை. அங்ஙனம்



அனுமதிக்கப் போவதும் இல்லை. உங்களுக்கு மதம் கொடுத்துள்ள அங்கீகாரத்தைக் கொண்டு, புறத் தோற்றத்தைக் காட்டி எழுதில் எங்கு வேண்டுமானாலும் உட் செல்ல முடிகிறது. எனவே அத்தகைய அடையாளங்களை இந்துமத நலனுக்காகவும்,

இந்து மக்களின் முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்தினால் நன்மை தரும். அதுவே சுயநலனுக்காக உபயோகிக்க முனைவீர்களானால்...! தோற்றுப் போய்விடுவீர்கள்?

# பூமியை நெருங்குகிறார்களா ஏலியன்கள்...?

## தொடரும் சமிக்ஞைகள்: குழப்பத்தில் விஞ்ஞானிகள்





“அது உண்மையில் ஏலியன்கள் அனுப்பியதுதான்”

“இல்லை... ஏதோ நட்சத்திரங்களிலிருந்து வெளியாகும் மைக்ரோவேவ் கதிர்களாம். அதில இருந்துதான் வந்திருக்காம்”

“அந்த வழியா வந்திருக்கெண்டா... சொல்லிருக்காங்க. நிச்சயமா ஏலியன்ஸ்தான் அனுப்பியிருக்கும்”

“எப்படியோ வருங்காலத்தில நாமளும் கார்டியன்ஸ் ஒவ் கலக்ஸி படத்தில வாற மாதிரி கிரகத்துக்கு கிரகம் ஜாலியா சுற்றுலா போகலாம்னு சொல்லுங்க”

“ஒருவேளை ‘தி இண்டிபெண்டஸ் டே’ படத்துல மாதிரி வர்ற ஏலியன்கள் மக்களை அடிமைப்படுத்திட்டா...?”

வேற்றுக் கிரகவாசிகளைப் பற்றிய பேச்சு யாருக்குத்தான் சுவாரசியமாக இருக்காது? நாமின்றி இந்தப் பேரண்டத்தில் வேறு எங்கோ மற்ற உயிர்களும் வாழ்ந்துகொண்டுதான் இருக்க வேண்டும். அவற்றை நாம் தேடித்தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் ஆராய்ச்சியாளர்களைவிட வெகுமக்களுக்குச் சற்று அதிகமாகவே உண்டு. மக்கள் அப்படியொரு மனநிலையிலேயே இருந்தால்தானே அப்படியான விடயங்களுக்குப் பிரச்சினையின்றிச் செலவழிக்க முடியும். அந்த வேலையை சினிமாக்கள் சிரமேற்கொண்டு செய்து வருகின்றன. மேற்கண்ட பேச்சுக்களைக் கேட்டபோது அந்த முயற்சிகளுக்கான பலன்களாகத்தான் தோன்றியது. இனி அதை யாரும் கேள்விகேட்க மாட்டார்கள். தங்களுக்கான நிதியைச் செவ்வனே எடுத்துச் செலவழிக்கலாம்.

சரி அது ஒருபுறம் இருக்கட்டும். நாம் விடயத்துக்கு வருவோம். வேற்றுக்கிரகவாசிகள் இருக்கிறார்களா...? இல்லையா? என்ற சந்தேகமும் பலவிதமான வாதங்களும் அவ்வப்போது ட்ரெண்டாகிக் கொண்டேதான் இருக்கின்றன. அந்தப் பேச்சுகளில் சில நாள்களாகப் புரிந்துகொள்ள முடியாத ரேடியோ சமிக்ஞைகள் (Signals) பூமிக்கு வந்துகொண்டே இருப்பதும் அடக்கம். இப்போது மறுபடியும் மக்கள் மத்தியில் வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய பேச்சு வருவதற்குக் காரணமும் விண்வெளியில் நமக்குக் கிடைத்த மினிரும் ஒளிகளும், அலறும் ரேடியோக்களும் ஏதோவொரு தகவலைச் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. ஆனால், அந்தத் தகவல்கள் என்னவென்பதைத்தான் இன்னமும் கண்டுபிடிக்க இயலவில்லை. அந்த சமிக்ஞைகள் தொலை தூர நட்சத்திரங்களின் நுண்ணலைகளில் இருந்து கிடைத்துள்ளன. பலவும் கருந்துளைகளிலிருந்து கிடைத்துள்ளன.

உலகளவில் இந்த சமிக்ஞைகள் விஞ்ஞானிகளைக் குழப்புகின்றன. தங்களிடமுள்ள சாதனங்களை வைத்து அவற்றைப் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். அதிநுட்பமான அந்தச் சமிக்ஞைகள் சில மில்லி விநாடிகளே வந்துவிட்டுச் செல்கின்றன. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அவை பல கோடி ஒளி ஆண்டுகளுக்கு அப்பாலிருந்து வந்துள்ளன. ஆனால், அவை எப்படி வந்தன?, யாராவது அனுப்பினார்களா? போன்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை.

**வேற்றுக்கிரகவாசிகளைத் தேடி நாம் சமிக்ஞைகளை அனுப்புவது அவ்வளவு நல்லதல்ல என்று அவர் எச்சரித்தார். அது மனித இனத்தின் இருப்பையே ஆபத்துக்கு உள்ளாக்கும் வாய்ப்புகள்தாம் அதிகம். தொலைதூரத்திலிருந்து வருபவர்கள் என்ன நோக்கத்தில் வருவார்கள் என்பது நமக்குத் தெரியாது.**

இந்த மர்மங்களுக்கு விடை காண வேண்டுமெனில் நமக்குக் கிடைத்த ரேடியோ சமிக்ஞைகள் சொல்லும் செய்திகளைக் கண்டுபிடித்தாக வேண்டும். இதேபோல் 2007 ஆம் ஆண்டும் சமிக்ஞைகள் கிடைத்தன. அப்போது வெறும் அறுபது சமிக்ஞைகளே வந்தன. இப்போது சமிக்ஞைகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகின்றது. இன்னமும் வந்துகொண்டே இருக்கின்றன. நேச்சர் (Nature) என்ற ஆய்வுப் பத்திரிகை வெளியிட்ட ஓர் அறிக்கையில், கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் விண்வெளியிலிருந்து புதிதாகப் பதின்மூன்று ரேடியோ சமிக்ஞைகளைப் பதிவுசெய்துள்ளனர். அவற்றில் ஏழு, அதிக அலைவரிசை கொண்டவை. அதாவது நானூறு மெகா ஹேர்ட்ஸ்க்கும் (MH)அதிகமாக இருந்துள்ளன.

இவை அடிக்கடி விட்டுவிட்டு வந்துகொண்டே இருக்கின்றன. பிரிட்டிஷ் கொலம்பியா மலையில் இருக்கும் கனடாவின் தேசிய ரேடியோ விண்வெளி ஆய்வகத்தில் தொடர்ச்சியாகப் பதிவாகும் ஒரே மாதிரியான சமிக்ஞைகளைப் பதிவு செய்துள்ளார்கள். அந்தத் தொடர் சமிக்ஞைகளை ஆய்வு செய்து, அவை எங்கிருந்து வந்தன, எப்படி வந்தன என்பதுபோன்ற தகவல்களைத் திரட்ட விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

இதுவரை நடந்த ஆராய்ச்சிகள், சில முடிவுகளுக்கு விஞ்ஞானிகளைக் கொண்டு வந்துள்ளன. சுப்பர் நோவா என்னும் பெருஞ்சூரியனிலிருந்து வெளியான மிச்சங்களுடைய சமிக்ஞைகளாக இருக்கலாம். இல்லையேல் அளவில் மிகப்பெரிய கருந்துளைகளில் உருவான வெடிப்பு நிகழ்வு ஏதாவதொன்றில் கடுமையான கதிர்வீச்சுகள் வெளியாகியிருக்கலாம். அதுகூட நமக்குக் கிடைத்திருக்கலாம் என்கிறார்கள்.

“இது ஏலியன்களால் அனுப்பப்பட்ட சிக்னல்கள்தான். இவை செயற்கையாக அனுப்பப்பட்டவையே என்பன போன்ற முடிவுகளுக்கு நாமே வரக்கூடாது” என்கிறார் விண்வெளி இயற்பியலாளரான ஏவி லோப் (Avi Loeb).

கடந்த இரண்டு மாதங்களில் நமக்குக் கிடைத்துள்ள இந்தப் புதிய சமிக்ஞைகள், வேற்றுக்கிரகவாசிகளின் புதிருக்கு விடைதேடும் விஞ்ஞானிகளின் பயணத்துக்கு முன்பைவிட அதிகம் பயனுள்ளவையாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். கிடைத்துள்ள அனைத்துமே சுமார் ஒன்றரை பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருந்தே கிடைத்துள்ளன. இப்படியாக ஒரே இடத்திலிருந்து தொடர்ச்சியாக வருவதால் அவை எங்கிருந்து வருகின்றன?, எப்படி வருகின்றன? போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிப்பது விரைவில் எளிதாகிவிடும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

பெரும்பாலான விஞ்ஞானிகள், தொலைவில் ஏதாவது நட்சத்திர வெடிப்பு நிகழ்வு நடந்திருக்கலாம் என்றும் அவற்றிலிருந்து வெளியான கதிர்வீச்சுகளே நமக்கு இப்படியான சமிக்ஞைகளாகக் கிடைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர். இந்த ஆய்வின் முடிவில் வழக்கம்போல் ஏதேனும் இயற்கை நிகழ்வாக இருக்கலாம் அல்லது


(05ஆம் பக்கம் பார்க்க)

# தொற்றுநோய்களின் உலகம் 06

வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்

மருத்துவ ஆராய்ச்சிகள் இன்று கற்பனைக்கு அப்பாற்பட்ட எல்லைகளைக் கடந்திருக்கின்றன. உலகெங்கும் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு என்று ஏராளமான நிதி கொட்டப்படுகிறது. ஆராய்ச்சியை எளிமைப்படுத்த அதிநவீன எந்திரங்கள் எல்லாம் வந்துவிட்டன. ஆனால், இந்த வளர்ச்சிக்கு எல்லாம் தொடக்கமாக, வேராக, உரமாக இருந்த மேதைகள், வாழ்ந்த காலத்தில் அங்கீகரிக்கப்படாமலே முடிந்து போனார்கள். இக்னோஸ் செம்மல்வேய்ஸ் அப்படியான ஒரு மேதை.

இக்னோஸைப் போல தொற்றுநோய் மருத்துவ ஆராய்ச்சியை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய மற்றுமொரு மேதையைப் பற்றி இப்போது பார்க்கலாம்.



எட்வேர்ட் ஜென்னர் (Edward Jenner 1749- 1823), இங்கிலாந்தில் பிறந்தவர். இவரை பிற்கால உலகம், 'நோய் எதிர்ப்பு மருத்துவத்தின் தந்தை' என்று கொண்டாடியது. 'ஏதோ ஒரு வேற்றுப்பொருள் உடலுக்குள் புகுந்து நோயை உருவாக்குகிறது' என்ற அளவில் அறியப்பட்ட காலம் அது. அப்போது, மக்களைப் பெரும் அவதிக்குள்ளாக்கிய நோய் பெரியம்மை. அந்தக்காலத்தில், உலகின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவீதத்தினர் இந்த நோயால் பாதிக்கப்பட்டார்கள்.

பெரியம்மை நோய் பரவிக்கொண்டிருந்த காலத்தில் 'கௌ பொக்ஸ்' (Cowpox) என்றொரு நோயும் பரவியது. இது மாடுகளுக்கு, குறிப்பாக பசு மாடுகளுக்கு வரக்கூடிய நோய். மாடுகள் மூலம் பால் கறப்பவர்களுக்கும் இந்த நோய் பரவியது. கிட்டத்தட்ட பெரியம்மை மாதிரியே உடம்பில் கொப்புளங்கள் தோன்றும். பெரிய அளவில் தாக்கம் இருக்காது. வந்த வேகத்திலேயே போய்விடும்.

ஜென்னர், பெரியம்மை பற்றித் தீவிர ஆராய்ச்சியில் இறங்கினார். 'யாருக்கெல்லாம் இந்த நோய் வருகிறது', 'நோயின் வீரியம் ஒவ்வொருவருக்கும் எப்படி இருக்கிறது' என்பது குறித்தெல்லாம் தீவிரமாக அவதானிக்கத் தொடங்கினார். 'யாருக்கெல்லாம் 'கௌ பொக்ஸ்' நோய் வந்ததோ அவர்களுக்குப் பெரியம்மை நோய் வரவில்லை. அப்படியே வந்தாலும் சீக்கிரமே குணமாகி விடுகிறது. உயிரிழப்பு ஏற்படுவதில்லை. பெரியம்மை நோயில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் சக்தி 'கௌ பொக்ஸ்' நோய்க்கு இருக்கிறது" என்று அவர் கண்டுபிடித்தார்.

உடனடியாக 'கௌ பொக்ஸ்' நோயால் பாதிக்கப்பட்ட பால் கறக்கும் தொழிலாளிகளை அழைத்தார். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த கொப்புளங்களின் உள்ளே இருந்த நீரையும், சதைத் துணுக்குகளையும் எடுத்துப் பொடியாக்கி, தன் தோட்டக்காரரின் 8 வயதுப் பையனுக்கு ஊசி மூலம் செலுத்தினார். அந்தப் பையனுக்கு, பெரியம்மை வந்தது. ஆனால், பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தாமல் சீக்கிரமே குணமாகிவிட்டது. படிப்படியாக பலருக்கும் இந்தச் சிகிச்சையை செய்யத் தொடங்கினார்.

இது மருத்துவ உலகையே குழப்பத்திலும் வியப்பிலும் ஆழ்த்தியது. ஜென்னர் செய்ததைப் பலரும் ஆங்காங்கே சோதனை செய்து பார்க்க ஆரம்பித்தார்கள். இந்தியாவிலும் இந்தச் சிகிச்சை பரவியது. ஜென்னர் கண்டுபிடித்த இந்த மருந்துதான் உலகின் முதல் தடுப்பூசி மருந்து. 'ஏதோ ஒன்றை உடலுக்குள் செலுத்துவதன் மூலம் ஒரு தொற்றுநோயைத் தடுத்து நிறுத்த முடியும்' என்று மனிதகுலம் நம்பத்தொடங்கியது அப்போதுதான். அதன் பிறகு, இது தொடர்பான ஆராய்ச்சிகள் 100 மடங்கு வேகத்தோடு வீரியம் பெற்றன. ஒரு கட்டத்தில் பெரியம்மை என்ற தொற்றுநோய் இந்த உலகை விட்டே விரட்டப்பட்டது.

(களைவோம்)

# தவளைக் கதையும் தமிழர் நிலையும்



கீழ்வரும் கதையை முகநூலில் படித்தபோது, "குட்டக் குட்டக் குனிபவனும் மடையன்" என்பதை இது நினைவுபடுத்துகிறது. யாருக்காக வாதாடிப் போராடினார்களோ அவர்களே உதைத்துத் தள்ளியதை வெளியில் சொல்ல முடியாத நிலையில் தமிழ்த் தலைமைகள் இருந்ததை நினைத்து இதைப் படியுங்கள். இரண்டு சிங்களவர்களுக்கு இடையில் பிரச்சினை என்று நடுநிலை வகித்திருந்தால் எதிர்க்கட்சித் தலைமையாவது தப்பியிருக்கும். இன்று ஒருமித்த நாடு என்றில்லை ஒற்றையாட்சிதான் என்று ரணில் சொன்னதையும் தமிழரின் சகிப்புத் தன்மையையும் நினையாமல் இதைப் படியுங்கள்.

• • •

ஒரு தவளையை பிடித்து தண்ணீரில் போட்டு கொதிக்க வையுங்கள், தண்ணீரின் வெப்பம் அதிகரிக்கும் போது, தவளை தன் உடலை அந்த வெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றி கொண்டே வரும், வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்பநிலைக்கு ஏற்ப தன் உடலை அந்த வெப்பத்துக்கு ஏற்ப மாற்றி கொள்ளும். தண்ணீர் கொதிநிலையை அடையும் போது, வெப்பத்தை தாங்க முடியாமல் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும்.

ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது. ஏனென்றால், வெப்பத்துக்கு ஏற்ப தன் உடலை மாற்றி கொண்டே வந்ததால் அது வலுவிழந்து போய் இருக்கும். சிறிது நேரத்தில் அந்த தவளை இறந்து விடும்.

எது அந்த தவளையை கொன்றது...?

பெரும்பாலானோர் கொதிக்கும் நீர் தான் அந்த தவளையை கொன்றது என்று சொல்வீர்கள்.

ஆனால், உண்மை என்னவென்றால், எப்போது தப்பித்து வெளியேற வேண்டும் என்று சரியாக முடிவெடுக்காத அந்த தவளையின் இயலாமைதான் அதை கொன்றது. நாமும் அப்படித்தான் எல்லோரிடமும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து போகிறோம்.

ஆனால், நாம் எப்போது அனுசரித்து போக வேண்டும், எப்போது எதிர்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். மன ரீதியாக, உடல் ரீதியாக, பண ரீதியாக மற்றவர்கள் நம்மை நசுக்க ஆரம்பிக்கும்போது, நாமும் சுதாகரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாக செய்ய ஆரம்பிப்பார்கள். உடலில் வலிமை இருக்கும் போதே, அவர்களிடமிருந்து தப்பித்து விடுதல் நன்று.

"நாம் அனுமதிக்காமல் நம்மை அழிக்க எவராலும் முடியாது"



சொல்லேர் உழவு - 16

# தண்ணீருக்கும் 'மி' எழுத்துக்கும் என்ன தொடர்பு?

கவிஞர் மகுடேசுவரன்

தொலைக்காட்சியில் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியைப் பார்த்திருப்பீர்கள். இரு தரப்பினரோ பல தரப்பினரோ கலந்துகொள்ளும் அந்நிகழ்ச்சியில் ஒருவர் விட்ட இடத்திலிருந்து இன்னொருவர் தமது பாட்டைத் தொடங்க வேண்டும். அவர் விட்ட இடத்திலிருந்து எடுத்துக்கொள்வது ஒரு சொல்லாக இருக்கலாம், அசையாக இருக்கலாம், ஓர் எழுத்தாககூட இருக்கலாம். கண்ணே என்று ஒருவர் தம் பாட்டை முடித்தால், அதிலிருந்து தொடங்குபவர் தம் பாட்டைக் கண்ணே என்றும் தொடங்கலாம், ஏ என்றும் தொடங்கலாம், நே என்றும் தொடங்கலாம். அப்போட்டிக்கு நடுவர் இருப்பின் 'விட்ட சொல்லிலிருந்து தொடங்குவதா, எழுத்திலிருந்து தொடங்குவதா' என்று கூறுவார். அவரே எடுத்துக்கொடுப்பார். ஒருமுறை பாடிய பாடலை மறுமுறை பாடக்கூடாது என்ற கட்டுப்பாடும் இருக்கும். பாடலின் பெயரால் இயங்கும் சொல்லறிவு நிகழ்ச்சிகளில் அஃதும் ஒன்று. ஓரெழுத்தில் தொடங்கும் சொல்லை நினைவில் கொணர்ந்து அதற்குரிய பாடலையும் கண்டறிந்து பாடுவது மூளைக்கு நல்ல வேலை.

பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியைப் போலவே "சொல்லுக்குச் சொல்" என்ற நிகழ்ச்சியை வடிவமைத்தால் நம்மில் யாரேனும் தேர்ச்சியடைவோமா ? "தண்ணீரோடு தொடர்புடைய சொல் மி என்ற எழுத்தில் தொடங்க வேண்டும்" என்று சொற்புதிர் நிகழ்ச்சியை உருவாக்கினால் நம்மில் யாரேனும் தேர்வோமா ? 'மிதவை' என்று நமக்குச் சொல்லத் தெரியுமா ? ஐயம்தான். ஓரளவு நல்ல சொற்பயிற்சியுடையோம் என்று நம்மை நாமே கருதிக்கொண்டிருந்தாலும் ஏதேனும் தேர்வு நடத்தினால் நாம் தோற்றுப் போய்விடுவோம் என்பதே உண்மை. அவ்வளவுக்கே நாம் சொல்லறிவில் திறமுடையோராய் இருக்கிறோம்.

எழுத்திலும் பேச்சிலும் படிப்பிலும் சிறப்படைய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் ஏதேனும் ஒரு சொல்லை நினைவில் கொண்டு வர முடியுமா என்ற தன்னாய்வில் அடிக்கடி ஈடுபடுங்கள். எடுத்துக்காட்டாக, மா என்ற நெடிலில் தொடங்கும் வினைச் சொற்கள் என்னென்ன என்று கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் நினைவில் வருகின்ற சொற்கள் என்னென்ன? மாட்டிக்கொண்டான், மாறினான், மாற்றினான், மாண்டான் என்று சில சொற்கள் தோன்றும். அச்சொல் தனித்த வினைச்சொல்லாக இருக்க வேண்டும். மாட்டிவிடு, மாட்டிக்கொள் போன்று துணைவினையோடு வருபவற்றையும் "மாட்டுதல்" என்னும் ஒரே வினைச்சொல்லாகத்தான் கருத வேண்டும்.

மா என்ற நெடிலில் தொடங்கும் வினைச்சொற்கள் எத்தனை நினைவுக்கு வந்தன ? மூன்று நான்கு சொற்கள் நினைவுக்கு வந்தன. மூன்று இலட்சம் சொற்கள் வழங்கப்படுவதாகக் கூறப்படும் தமிழ் மொழியில் மா என்ற எழுத்தில் தொடங்கும் வினைச்சொற்கள் எத்தனை இருக்க வேண்டும் ? ஒவ்வோர் எழுத்திலும் ஆயிரம் சொற்களேனும் தொடங்கவேண்டுமில்லையா ? அப்போதுதான் இரண்டு இலட்சத்து நாற்பத்தேழாயிரம் சொற்கள் என்னும் கணக்கு வருகிறது. அவற்றில் பெரும்பாலான எழுத்துகள் சொல்லுக்கு முதலாகத் தோன்ற மாட்டா என்றாலும் ஆயிரம் சொற்களையேனும் நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

ஆயிரம் பக்கங்கள் கொண்ட அகராதியில் க என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களே மிகுதியாக இருக்கின்றன. க என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்கள் எழுபத்து ஐந்து பக்கங்களுக்கு விரிகின்றன. இது ஓர் அகராதியில் இடம்பெற்ற சொற்களின் எண்ணிக்கையில் ஏறத்தாழ ஏழு விழுக்காடு. ககரத்தைப் போலவே மகர எழுத்துகளில் தொடங்கும் சொற்களும் எண்ணிக்கையில் மிகுதி. ஆனால், மகர எழுத்துகளின் நெடில் ஒன்றுக்கு நம்மால் பத்து வினைச்சொற்களைக்கூடச் சொல்ல முடியவில்லை.

நம்மால்தான் சொல்ல முடியவில்லை. இயலாமையை ஏற்றுக்கொள்கிறோம். ஓர் அகராதியினை எடுத்து வைத்துக்கொண்டு மா என்னும் நெடில் வரிசையில் தொடங்கும் வினைச்சொற்களைப் பட்டியலிட்டே பார்த்துவிடுவோம். மா என்ற எழுத்தில் தொடங்கும் வினைச்சொற்கள் நூற்றுக்கணக்கில் இருக்க வேண்டும்தானே ? இருக்கின்றனவா என்று பார்த்து விடுவோம். அப்போதுதான் இந்தக் காட்சி முழுமையாய் விளங்கும்.

மாசறு – குற்றம் நீங்கு

மாசூறு – குற்றம் ஆகு

இவ்வரிசையில் மாசு அடை, மாசு தீர், மாசு களை போன்று பல சொற்களை உருவாக்கலாம் என்றாலும் மாசு என்ற முன்னொட்டோடு தோன்றுவதை ஒரே வரிசையில் வைத்துக்கொள்ளலாம்.

மாட்டுதல் – இணைத்தல் உள்ளிட்ட பல பொருள்கள். அதிலிருந்து மாட்டுவித்தல் என்னும் பிறவினைச்சொல்.

மாண்டல் , மாளுதல் – சாதல்

மாந்துதல் – ஊக்கமழிதல் உள்ளிட்ட பல பொருள்கள்

மாய்தல், மாய்த்தல் – அழிதல், அழித்தல் உள்ளிட்ட பல பொருள்கள்

மார்தட்டுதல் – போட்டி போடுதல்

மார்புயர்த்தல், மார்நிமிர்த்தல் போன்று பல சொற்கள்

மாலைகட்டுதல், மாலைசூட்டுதல், மாலை சாத்துதல், மாலைமாற்றுதல் உள்ளிட்ட பல சொற்கள்

மாழ்குதல் – மயங்குதல்

மாழாத்தல் – ஒளிமங்குதல்

மாற்றுதல் – வேறுபடுத்தல் உள்ளிட்ட பல பொருள்கள்

மாறுதல் – வேறுபடல் உள்ளிட்ட பல பொருள்கள்.

(மாறுபடு போன்ற முன்னொட்டுகளில் பல சொற்கள்)

மானம்போதல், மானம்மூடுதல், மானம்பார்த்தல் உள்ளிட்ட பல சொற்கள்

மானித்தல் – செருக்கடைதல் உள்ளிட்ட பல பொருள்கள்.

மானுதல் – ஒத்தல், ஒன்றுபோலாதல்.

எண்ணிப் பார்த்தால் பதினைந்து வினைச்சொற்கள்தாம் மா என்ற நெடிலில் தொடங்குகின்றன. அவற்றைக்கூட அறியாமல் நாம் திருதிருவென்று விழித்தோம். இந்தப் பன்னிரண்டு சொற்களை நாம் நன்கு அறிந்திருப்பின் அவற்றிலிருந்து தோன்றிய இருநூறு சொற்களின் பொருள்களையும் நாம் அறிந்தவர்கள் ஆவோம். நம் அணுகுமுறையைத் தரைமட்டத்திற்கு இறக்கிக்கொண்டால் கற்பது எளிதே. (தொடரும்)

# குழந்தையா...? ஐயோ... வேண்டாம்...!

## ஆட்டிப் படைக்கும் செல்லப்பிராணி மோகம்



தம்பதியாக இணையும் ஆண் - பெண் வாழ்க்கைக்கு முழு அர்த்தம் கொடுப்பவர்கள் குழந்தைகள். குழந்தைப் பேறு வேண்டும் என்பதற்காக சொத்து முழுவதையும் செலவழித்தவர்கள், கடன் வாங்கி மருத்துவம் செய்தவர்கள் எனப் பலர் நம் மண்ணில் ஏராளம்.

ஆனால், குழந்தை பெற்றால் செலவு அதிகம், அவர்களால் மனஅழுத்தம் அதிகம் ஏற்படுகிறது எனக் கருதி குழந்தைகளுக்குப் பதிலாக செல்லப்பிராணிகளை வளர்க்கும் கலாசாரம் தற்போது தென்கொரியாவில் வேகமாகப் பரவி வருகிறது.

குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பாதவர்கள், திருமணமே செய்துகொள்ளாதவர்கள் எனப் பல இளைஞர்கள் செல்லப்பிராணிகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் செல்லப்பிராணிகளுக்கான பிரத்யேக உடைகள், விளையாட்டுப் பொருள்கள், உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகள், நிறுவனங்களின் வர்த்தகம் அதிகரித்துள்ளது.

இதைவிட விநோதம் என்ன தெரியுமா? செல்லப்பிராணிகள் உயிரிழந்துவிட்டால் அவற்றுக்கு இறுதிச்சடங்கு நடத்தி, அவற்றின் சாம்பலைப் பாதுகாக்கும் பழக்கமும் உள்ளது. இதனால் செல்லப்பிராணிகளுக்கு இறுதிச்சடங்குகள் நடத்துவதைப் பலர் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இதனால் தென்கொரியாவில் செல்லப்பிராணிகள் வர்த்தகம் பல மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் செல்லப்பிராணிகள் தொடர்பான வர்த்தகம் 4 இலட்சத்து 9 ஆயிரத்து 600 கோடி ரூபா. இது 2027 ஆம் ஆண்டில் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், எதிர்கால மனித வளத்துக்குத் தேவையான குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. உலகின் மிகக் குறைந்த பிறப்பு விகிதம் தற்போது தென்கொரியாவில்தான்.

## கொரியாவின் கதை #11

# ரஷ்யா, அமெரிக்காவால் பங்குபோடப்பட்ட கொரியா



சீனாவில் உள்ள ஹர்பின் ரயில்வே ஸ்ரேஷனில் ரஷ்ய பிரதிநிதியுடன் பேச்சு நடத்த இருவரும் வந்தனர். பேச்சு நடத்திவிட்டு திரும்பிய சமயத்தில் அவர்களுடைய பாதுகாவலர்களை ஊடுருவி நுழைந்த ஆன் முதலில் பிரதமர் இடோவை சுட்டார். அடுத்து ஆளுநரை சுட்டார். இருவர் தவிர, உயரதிகாரி ஒருவரை சுட்டுக்கொன்றார். பின்னர் ரஷ்ய மொழியில் 'புரட்சி ஓங்குக" என்று முழக்கமிட்ட ஆன் கொரிய கொடியை ஏந்தி அசைத்தார். உடனே இவரை பொலிஸார் கைதுசெய்தனர். நீதிமன்றத்தில் பேசி இவர், தன்னை அரசியல் குற்றவாளியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

ஜப்பானிய பிரதமர் இடோவை ஏன் கொன்றேன் என்று இவர் 15 காரணங்களை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

1. கொரிய பேரரசி மியோங் சியோங்கை சதிசெய்து கொலை செய்தார்.

2. பேரரசர் கோஜோங்கை பதவியிலிருந்து தூக்கி எறிந்தார்.

3. சமத்துவமற்ற 14 ஒப்பந்தங்களை கொரியா மீது திணித்தார்.

4. அப்பாவிக் கொரிய மக்களை கொன்று குவித்தார்.

5.படைகளை பயன்படுத்தி கொரிய அரசாங்கத்தை அபகரித்துக் கொண்டார்.

6.கொரியாவுக்கு சொந்தமான ரயில் ரோடுகளையும், சுரங்கங்கள், வனங்கள், நதிகளை கொள்ளையடிக்க காரணமாக இருந்தார்.

7.ஜப்பான் பணத்தை பயன்படுத்தும் படி கொரியர்களை நிர்பந்தப்படுத்தினார்.

8.கொரியாவின் ஆயுதப்படையை கலைத்தார்.

9.கொரியர்கள் கல்வி பெறுவதை தடுத்தார்.

10. கொரிய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதை தடை செய்தார்.

11. கொரிய பாடப்புத்தகங்களை பறிமுதல் செய்து தீவைத்துக் கொளுத்தினார்.

12. ஜப்பானியர்களின் பாதுகாப்பை கொரியர்கள் விரும்புகிறார்கள் என்ற பொய்யை உலகம் முழுவதும் பரப்பினார்.

13. கொரியா ஜப்பான் இடையிலான உறவு அமைதியாக இருப்பதாக உண்மைக்கு மாறான தகவல்களைச் சொல்லி ஜப்பான் பேரரசரை நம்ப வைத்தார்.

14. ஆசியாவின் அமைதியை தகர்த்தார்.

15. ஜப்பான் பேரரசர் கோமேயை கொன்றார்.

இந்தக் காரணங்களுக்காக, கொரிய எதிர்ப்பு படையின் தளபதி என்ற வகையில் நான் கொன்றேன். கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளின் அமைதியை சீர்குலைத்து உறவுகளை நாசம் செய்தார். இரு நாடுகளும் நட்போடு அமைதியாக ஆட்சி செய்தால் உலகுக்கே முன்னுதாரணமாக இருக்கலாம் என்று ஆன் ஜங் நீதிமன்றத்தில் கூறினார். தன்னை அரசியல் கைதியாக விசாரித்து, இராணுவத்தால் சுட்டுக்கொல்ல வேண்டும் என்றார். ஆனால், அவரை சாதாரண குற்றவாளியைப் போல விசாரித்து, தூக்கிலிட்டனர். அவரை புதைத்த இடம் இன்றுவரை கண்டறியப்படவில்லை. இருந்தாலும், அவருடைய தியாகத்தை இரண்டு கொரிய அரசுகளும் இன்றும் போற்றுகின்றன.

• • •

ஒன்றாய் இருந்த கொரியா எப்படி இரண்டாக பிரிந்தது என்பதை அடுத்து பார்ப்போம்.

1910 ஆண்டுக்குள் ஜப்பான் தந்திரங்களைப் பயன்படுத்தி, கொரியாவை முழுமையாகத் தனது பிரதேசமாக இணைத்துக் கொண்டது. பேரரசியைக் கொன்று, பேரரசர் கோஜோங்கையும் பதவியிலிருந்து நீக்கியது.

ஜப்பானின் பிடியில் கொரியா பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. கொரிய மக்கள் ஜப்பானியரின் அடிமைகளாக மாற்றப்பட்டனர். ஜப்பானுக்காக உழைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். ஜப்பான் ஆதிக்கத்தை எதிர்த்து தேசியவாத குழுக்களும், புரட்சிகர குழுக்களும் விடுதலைப் போராட்டத்தை நடத்தின. இந்த விடுதலை இயக்கங்கள், கொரியாவுக்குள் இயங்க முடியவில்லை. வெளிநாடுகளில் இருந்தே போராடின. கொரியாவின் விடுதலைக்காக போராடியவர்கள் தனித்தனியாகப் போராடினார்கள். வெவ்வேறு நோக்கங்களை மையமாக வைத்துப் போராடினார்கள். தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் போராடினர்.

சீனாவில் கொரியா தேசிய அரசாங்கத்தை அமைத்தார்கள். ஜப்பானுக்கு பயந்து இந்த அரசாங்கத்தை யாரும் அங்கீகரிக்கவில்லை. ஜப்பானின் இராணுவ தொழிற்சாலைகளிலும், இராணுவத்திலும் கொரியாவின் ஆண்களும் பெண்களும் உயிரைக் கொடுத்து உழைத்தார்கள். இரண்டாம் உலகப்போரில் எவ்வளவு வேகமாக ஜப்பான் தனது எல்லையை விரிவுபடுத்தியதோ, அதே வேகத்தில் தோல்வியின் விளிம்புக்கு விரட்டப்பட்டது. சீனாவில் சியாங்கே சேக்கும் மாவோவின் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து ஜப்பான் இராணுவத்தை விரட்டியடித்தன.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானின் தோல்வி உறுதியான நிலையில் எகிப்து தலைநகரில் கூட்டுப்படைகளின் தலைவர்கள் கூடி விவாதித்தனர். அப்போது, ஜப்பான் கைப்பற்றிய நாடுகள் அனைத்தும் விடுதலை பெற்றவையாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. கொரியாவைப் பொறுத்தமட்டில், அது அடிமைத்தனத்தில் இருப்பதால், நம்பகமான பொறுப்பாளர்களின் வசம் இருக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ரஷ்யா ஜனாதிபதி ஸ்டாலினிடம் யோசனை தெரிவித்தார். அந்த யோசனையை ஏற்ற ஸ்டாலின், இந்தப் பொறுப்பு மிகக் குறுகிய காலமே இருக்க வேண்டும் என்றார்.

இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் ஐரோப்பிய நாடுகளை பங்கிட்டுக் கொள்வது தொடர்பாக கூட்டுப் படைகளுக்கு இடையே குழப்பம் நிலவியது. அந்தப் பிரச்சினை முடிந்தவுடன், ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது. உடனே, ஜப்பான் மீது சோவியத் யூனியனும் யுத்தம் அறிவித்தது.

கொரியாவின் வடபகுதிக்குள் ரஷ்யப் படைகள் அதிவேகமாக முன்னேறின. ரஷ்யாவின் வேகம் அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டியது. கொரியா முழுவதையும் ரஷ்யா கைப்பற்றிவிடுமோ என்று பயந்தது. 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இரண்டு இளம் அதிகாரிகளை கொரியாவுக்கு அனுப்பியது. அவர்கள், கொரியாவில் அமெ ரிக்க இராணுவம் கைப்பற்றிய பகுதிகளை வரையறை செய்யும் வேலையை செய்தனர். குறைவான கால அவகாசத்தில் போதுமான தயாரிப்பு இல்லாத நிலையில் 'நஷனல் ஜோக்கிரபி மேப்'பை வைத்து 38 ஆவது நிலநேர்கோடை அளவாக கொண்டு கொரியாவை இரண்டாக பிரித்தார்கள். இந்த நிலநேர்கோடுதான் குறைந்தபட்சமாக கொரியாவை சரி பாதியாகப் பிரிப்பதாக அவர்கள் நினைத்தார்கள். இந்த நில நேர்கோட்டுக்கு கீழே தலைநகர் சியோல் இருக்கிறது. மேல்பகுதியில் பியாங் யாங் இருக்கிறது.

40 ஆண்டுகளுக்கு முன்பே, ஜப்பானும் ஜார் மன்னர் தலைமையிலான ரஷ்யாவும் இதே நேர்கோட்டை அளவாக வைத்து கொரியாவை இரு நாடுகளும் பிரித்துக் கொள்ள பேச்சு நடத்தியிருந்தன. இந்தப் பிரிவினையால், அன்றைய நிலையில் ஒரு கோடியே 60 லட்சம் கொரியா மக்கள் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலும், 90 லட்சம் மக்கள் சோவியத் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலும் வந்தார்கள். இந்தப் பிரிவினையை சோவியத் யூனியன் உடனடியாக ஒப்புக் கொண்டது. சோவியத் ரஷ்யாவின் செஞ்சேனை வடக்குப் பகுதியில் உள்ள பியாங்யாங் நகரை கைப்பற்றியது.

அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள தென்கொரியாவின் அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி எழுந்தது. கொரியாவுக்கான ஜப்பானின் ஆளுநர் ஜெனரலாக இருந்த அபே நொபுயுகி கொரியாவின் பல்வேறு விடுதலைக் குழுக்களின் தலைவர்களை தொடர்புகொண்டார். ஓகஸ்ட் இறுதியில் லியு வூன் ஹியுங் என்ற இடதுசாரித் தலைவர் தலைமையில் 1945 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொரியா மக்கள் குடியரசு நிறுவப்பட்டது.

1945ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாஸ்கோவில் கூட்டுப்படை நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, சீன குடியரசு, பிரிட்டன் ஆகிய நாடுகள் கொரியாவை பாதுகாக்கும் ட்ரஸ்ட்டீஷிப் குழுவில் இடம்பெறுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தக் குழு கொரியாவின் விடுதலையை ஐந்து ஆண்டுகளில் முடிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அமைக்கப்பட்டது.

(இன்னும் வரும்)

### மறுபடியும் ஆபாசம்...?

காஜல் அகர்வால் நடிக்கும் சீதா படத்தின் முதல் பார்வை அண்மையில் வெளியாகி ரசிகர்களை அதிர்ச்சி கொடுத்துள்ளது.

காரணம், ஆபாச அதிர்ச்சியை வெளிப்படுத்தும் காஜலும், சந்தோசத்தை வெளிப்படுத்தும் நாயகனின் சிரிப்பும்தான்.



முன்னதாக பாரிஸ் பாரிஸ் படத்தின் டீசரில் பெண் நண்பி ஒருவர் காஜலின் மார்பை அழுத்துவதாக ஆபாசக் காட்சி வெளியாகியிருந்தது. இதற்கு அவரின் ரசிகர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் காஜலின் இன்னொரு ஆபாச உணர்ச்சியை வெளிப்படுத்தும் படத்தின் முதல் பார்வையால் ரசிகர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



### அஜித் பட நாயகிகள் அறிவிப்பு

தல அஜித் நடிப்பில், போனிகபூரின் தயாரிப்பில், ஹெச்.வினோத் இயக்கத்தில் "பிங்க்" திரைப்படம் மீளுருவாகிறது.

படத்தில் நடிக்கும் நட்சத்திரங்கள் தெரிவு முடிந்துவிட்டது. வித்யாபாலன், நஸ்ரியா, ஷ்ரதா ஸ்ரீநாத், ஆண்ட்ரியா தரியங், அபிராமி வெங்கடாச்சலம், ரங்கராஜ் பாண்டே, ஆதிக் ரவிச்சந்திரன், அர்ஜுன் சிதம்பரம், சுஜித்குமார் ஆகியோர் நடிக்கின்றனர்.

படத்தில் அஜித்துக்கு நாயகி இல்லை. யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

### மெகா ஸ்ராருடன் அழகிகள்...!

மெகா ஸ்ரார் சிரஞ்சீவியின் 151வது படமான "சயிரா நரசிம்ம ரெட்டி"படத்தில் நாயகியாக நயன்தாரா மற்றும் முக்கிய வேடம் ஒன்றில் தமன்னாவும் நடித்து வருவது தெரிந்ததே.

மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகி வரும் இந்தப் படம் இவ்வருடம் வெளியாகும். இந் நிலையில் சிரஞ்சீவி நடிக்கவுள்ள 152வது படத்தை பிரபல தெலுங்கு இயக்குனர் கொரட்டலா சிவா இயக்கவுள்ளார்.

இந்த படத்திலும் நயன்தாரா மற்றும் தமன்னா ஆகிய இருவரும் நாயகிகளாக நடிக்கவுள்ளனராம். விரைவில், படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்கிறார்கள்.



### இது நாயகிகளின் காலம்

நாயகனே இல்லாமல் 4 நடிகைகள் கதாநாயகிகளாக நடிக்கும் படமாக உருவாகிறது கன்னித்தீவு.

வரலட்சுமி, ஐஸ்வர்யா தத்தா, ஆஷ்னா சவேரி, சுபிக்ஷா ஆகியோர் நடிக்கும் படத்தை சுந்தர் பாலு இயக்குகிறார். இவர் ஏற்கனவே த்ரிஷ ாவை வைத்து கர்ஜணை படம் இயக்கியவர்.


சண்டைக் காட்சிக்காக பெரும் பொருட் செலவில் செட்கள் போடப்பட்டுள்ளன. படத்தில் 45 நிமிடம் கிரபிக்ஸ் காட்சிகள் இடம்பெறுகிறதாம்.





மலையாள சுப்பர் ஸ்ரார் மம்முட்டி நடிக்கும் "மதுரராஜா" படத்தில் சன்னிலியோன் ஒரு பாடலுக்கு நடனம் ஆடவுள்ளார் ஏற்கனவே செய்திகள் வெளிவந்தது.

தற்போது இப்பாடலின் படப்பிடிப்பிற்காக சன்னிலியோன் கேரளா சென்றுள்ளார். மம்முட்டி, சன்னிலியோன் இணைந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



பொலிவூட் நடிகை பாயல் ராஜபுத் தமிழில் ஏஞ்சல் படத்தில் அறிமுகமாகிறார்.

புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக பிஜி தீவுகள் சென்று விடுமுறையைக் கொண்டாடினார்.

நீச்சலுடையுடன் படம் ஒன்றை சமூகவலைதளத்தில் பதிந்தவர் "என் அழகைப் பார்த்து உங்கள் இதயத்தை அலைபாய விடாதீர்கள்... உங்கள் உடலையும்தான் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

## பாக்யராஜின் அதிர்ச்சி

கபடிவீரன் படத்தின் பாடல் வெளியீட்டு விழா கடந்த வாரம் நடந்தது. இதில், நமீதா கணவர் வீராவுடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.



நிகழ்வில் கலந்து கொண்ட மற்றொரு சிறப்பு விருந்தினர் கே.பாக்யராஜ் நமீதாவின் கணவரால் அதிர்ந்து போனார். தனது அதிர்ச்சி பற்றி உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

"நமீதாவின் கணவர், ஐயப்ப விரதம் இருக்கிறார். அடுத்த மாதம்தான் அவர் மலைக்குப் போகிறார். அழகிய மனைவியை அருகில் வைத்துக் கொண்டு நாள் கணக்கில் விரதமிருப்பது ரொம்பக் கஷ்டமாச்சே... முடியாதே அதுதான் அதிரச்சியாகி விட்டது" என்றார்.

## நாய்க்கு செலவு ரூ.5 லட்சம்



பிரியங்கா சோப்ரா நாய் ஒன்றை வளர்த்து வருகிறார். டயானா எனப் பெயரிட்டுள்ள அந்த நாய் எங்கு சென்றாலும் தங்குவதற்கு வசதியாக பை வீடு ஒன்றை 5 இலட்சம் ரூபா கொடுத்து வாங்கியுள்ளார்.

தனது நாயின் பெயரில், இன்ஸ்ட்ராகிராமில் டயரிஸ் ஒவ் டயானா என்ற பெயரில் பக்கம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். இதில், நாயக்கு விதவிதமான உடைகள் அணிந்து படம் எடுத்துப் பதிவேற்றியுள்ளார் பிரியங்கா. அவரின் நாயை சமூகவலைதளத்தில் 98 ஆயிரம் பேர் பின்தொடர்கிறார்களாம்.

## ரெமோ இயக்குநருடன் கார்த்தி




சிவகார்த்திகேயன் நடித்த ரெமோ படத்தை இயக்கியவர் பாக்யராஜ் கண்ணன். வெற்றிப் படத்தை இயக்கியும் நீண்டநாள்களாக படம் எதையும் இயக்காமல் இருந்த அவர் இப்போது கார்த்தியை இயக்கவுள்ளார்.

கார்த்தி இப்போது தேவ் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம் முடிந்ததும் பாக்யராஜ் கண்ணனின் இயக்கத்தில் நடிக்கிறார். கதாநாயகி, ஏனைய நடிகர்கள் தெரிவு இப்போது இடம்பெறுகிறது.

தொடர் 02

# ஓர் அடிமையின் விடுதலைப் போர்

—— பிரெட்ரிக் டக்ளஸ்



**1734 ஆம் ஆண்டு மரியா ஜோசப் ஏஞ்சலின் என்ற பெண் அடிமை தன்னை அடிமையாக நடத்துவதையும், தன்னை விற்க முடிவு செய்ததையும் எதிர்த்து மண்ட்ரியல் என்ற இடத்தில் எஜமானனின் வீட்டைக் கொளுத்தி விட்டாள். அந்த நெருப்பு பரவியதில் 42 கட்டடங்கள் சேதமடைந்தன. இதற்காக அவளது இரண்டு கைகளும் வெட்டப்பட்டு, உயிருடன் தீமூட்ட வேண்டும் எனத் தண்டனை அளிக்கப்பட்டது. 1824 ஆம் ஆண்டில் அடிமைச் சிறுவன் ஒருவன் 24 சதுங்களை திருடிய குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டான்.**

அடிமை அமைப்பின் சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் தண்டனைகளும் அடிமைகளின் மன அமைப்பின் மீது ஏற்படுத்தும் மோசமான தாக்கங்களை, நாஜிகளின் வதை முகாமில் அடைக்கப்பட்டவர்களின் மீது செலுத்தப்பட்ட வன்முறைக்கு நிகரானதாக உளவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். மனிதர்களின் தனித்தன்மையைக் களைவதும் கூட்டு மனப்பான்மையைத் தகர்ப்பதுமே இரண்டு அமைப்புகளின் நோக்கங்களாகவும் விளைவுகளாகவும் இருந்தன என்பதே வரலாற்று உண்மை.

சொந்த நாட்டிலிருந்து கறுப்பின மக்கள் அடிமைகளாக அப்புறப்படுத் தப்படும்போதே தனித்தன்மையை அழிக்கும் நடவடிக்கைகள் தொடங்கி விடுகின்றன. அடிமைகளாகக் கப்பல்களில் ஏற்றப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே ஆண்கள், பெண்கள் எல்லோரது தலைகளும் சுத்தமாக மழிக்கப்பட்டுவிடும். வியாபாரியின் அடையாளத்தைக் கொண்ட வெள்ளிக் கம்பியையோ, இரும்புத் துண்டையோ நெருப்பிலிட்டு அடிமையின் உடலில் சூடு போட்டு விடுவார்கள். குறிப்பிட்ட நாளில் நாடு கடத்தப்படப் போகும் கறுப்பர்களுக்கு அவர்களது சொந்த மண்ணின் கடைசி நிமிடங்களை அடையாளப்படுத்தும் விதமாக விருந்து அளிக்கப்படும். விருந்து முடிந்ததுமே படகின் மூலமாகக் கப்பலுக்குக் கொண்டு செல்லப்படுவார்கள்.

கப்பல் தளத்தை அடைந்ததுமே அனைவரும் நிர்வாணப்படுத்தப்படுவார்கள். பயணம் முழுக்க அடிமைகளை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருத்த நிர்வாணமே தவிர்க்க முடியத வழியாக அனுசரிக்கப்பட்டது. உடை களையப்பட்டதும் ஆண்கள் அனைவரும் கப்பலின் கீழ்த் தளத்திலும் பெண்கள் அறைகளுக்குள்ளும் அடைக்கப்பட்டு விடுவார்கள். சிறுவர், சிறுமிகள் பயணம் முழுக்க, காலநிலை எப்படியிருந்தாலும் கப்பலின் மேல் தளத்தில் கொடுக்கும் சாக்குப் பைகளுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான். உணவு நேரம் வந்ததும் மர வாளிகளில் உணவு வைக்கப்படும். பத்துப் பேருக்கு ஒரு மர வாளி உணவு. மேற்பார்வையாளரின் கண்ணசைவை அனுசரித்து ஒவ்வொருவராக உணவை அள்ளி விழுங்க வேண்டும்.

இரவில் தூங்கும்போதுகூட உடலை வலதுபுறமாக ஒருக்களித்து, ஒருவரை யொருவர் ஒட்டியவாறு வரிசையாகவே கிடக்க வைக்கப்பட்டார்கள். கப்பல் பயணிகள் போல் அவரவர் படுப்பதற்கு இடம்பிடிப்பதைத் தவிர்க்கவே இந்தப் படுக்கை ஒழுங்கு அனுசரிக்கப்பட்டது. கப்பல் கரை சேர்ந்ததும் அனைவரும் நிர்வாணமாகவே கரையேற்றப்படுவார்கள். எஜமானர்கள் பார்வையிட்டு விலைபேசி அடிமைகளைக் கொண்டு செல்வார்கள்.

கப்பல் பயணத்தின்போது நோய்வாய்ப்பட்டு, பயண காலத்தில் உடல்நிலை தேற வாய்ப்பில்லை என்று தெரிந்தால் அவர்களைக் கடலில் தூக்கி எறிந்து விடுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு பயணத்தின்போதும் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து விடுவார்கள். இந்த அடிமை வியாபாரத்தின் மூலம் 2 கோடிக்கும் அதிகமான கறுப்பின மக்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்பட்டனர் எனத் தகவல்கள் உள்ளன. இந்த அடிமை வியாபாரத்தின் தலைமையிடமாகக் கருதப்பட்ட கானா நாட்டில் மட்டுமே 36 அடிமைக் கொட்டகைகள் இருந்துள்ளன.

நூற்றாண்டுகளாக அடிமை அமைப்பு பல்வேறு தேசங்களிலும் இருந்து வந்தது என்றாலும் பொதுவாக போர் கைதிகளும் அந்தந்த சமூகத்தின் கீழ்த் தட்டு மக்களுமே அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். போர் கைதிகளைப் பொறுத்தவரை அடிமைத்தனம் என்பது மரணத்திற்கு ஒரு மாற்றாகவே இருந்தது. வெகு அபூர்வமாகவே அடிமைகளின் குழந்தைகளும் அடிமைகளாக இருத்தப்பட்டனர். ஆனால், இதில் எந்த வகையிலும் அமெரிக்க அடிமை முறையைச் சேர்த்துக் கொள்ள முடியாது. ஆபிரிக்கா - அமெரிக்கா இடையிலான இந்த அடிமைச் சந்தை ஒரு பெரும் வியாபார அமைப்பாகவே இயங்கி வந்தது.

தங்கள் சொந்த மண்ணில் இருந்து விருப்பத்திற்கு எதிராக உரிமைகளை இழந்து அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்ட கறுப்பின மக்களுக்கு இந்த மண்ணில் குறைந்தபட்ச மனித உரிமைகூட அனுமதிக்கப்படவில்லை. ஏன் அவர்கள் மனிதர்களாகக்கூட மதிக்கப்படவில்லை. சுதந்திரம் என்றால் என்ன என்று தெரியாத ஒரு தேசத்தில் அடிமையாக இருப்பதற்கும், தனி மனித உரிமையே வேறெவற்றையும்விடத் தலையாயது என்று முழக்கமிட்ட அமெரிக்காவில், சுதந்திரமான ஒரு நாட்டில் அடிமையாக நடத்தப்படுவதற்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது.

அடிமை அமைப்பை எதிர்த்து அடிமைகள் காலம் காலமாகவே போராடி வந்திருக்கிறார்கள். தனிமனித தப்பித்தல் முயற்சியில் தொடங்கி, காலப்போக்கில் கலகங்களாகக்கூட அவை உருவெடுத்திருக் கின்றன. அடிமைகளில் பலர் மந்தமாக உழைப்பது, கருவிகளைச் சேதப்படுத்துவது, பயிர்களை நாசம் செய்வது போன்ற மறைமுக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதுண்டு. துணிச் சல்மிக்கவர்களோ எஜமானர்களுக்கு விசம் வைப்பது, கோடரிகளால் அவர்களை வெட்டிக் கொல்வது போன்ற தீவிர செயல்களிலும் இறங்கியிருந்தனர். இத்தகைய கலகங்களை மூன்று கட்டங்களாக வரலாற்று ஆய்வாளர்கள் பிரிக்கின்றார்கள். 1730 தொடக்கம் 1760 வரையானவை திட்டமிடப்படாத - திடீர் தாக்குதல் வகையானவை, 1760 தொடக்கம் 1800 வரையானவை பண்ணை அடிமைகளால் ஆங்காங்கே கலகங்கள் நடத்தப்பட்டன. 1800 தொடக்கம் 1840 வரையானவை நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட, திட்டமிட்ட போராட்டங்களாக உருவாயின.

இத்தகைய எதிர்ப்புகளுக்கும் கலகங்களுக்கும் அடிமைகளின் குற்றங்களுக்குமான தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. 1640 ஆம் ஆண்டில் இமானுவேல் என்ற அடிமைக்கு தப்பியோட முயற்சித்த குற்றத்திற்காக முப்பது கசையடிகள் தண்டனையாக வழங்கப்பட்டது. அத்துடன் R (Runaway) என்ற எழுத்தும் அவனது கழுத்தில் முத்திரையிடப்பட்டது. 1734 ஆம் ஆண்டு மரியா ஜோசப் ஏஞ்சலின் என்ற பெண் அடிமை தன்னை அடிமையாக நடத்துவதையும், தன்னை விற்க முடிவு செய்ததையும் எதிர்த்து மண்ட்ரியல் என்ற இடத்தில் எஜமானனின் வீட்டைக் கொளுத்தி விட்டாள். அந்த நெருப்பு பரவியதில் 42 கட்டடங்கள் சேதமடைந்தன. இதற்காக அவளது இரண்டு கைகளும் வெட்டப்பட்டு, உயிருடன் தீமூட்ட வேண்டும் எனத் தண்டனை அளிக்கப்பட்டது. 1824 ஆம் ஆண்டில் அடிமைச் சிறுவன் ஒருவன் 24 சதங்களை திருடிய குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டான்.

அடிமை முறைக்கு எதிரான அமைப்பு ரீதியான நடவடிக்கைகளும் போராட்டங்களும் அமெரிக்காவில் மிகத் தாமதமாகவே தொடங்கப்பட்டன. இங்கிலாந்து, கனடா மற்றும் பிற காலனியாதிக்க நாடுகளில் இத்தகைய முயற்சிகள் வெற்றியடைந்து அடிமை ஒழிப்பு முறை நடைமுறையான பின்பே அமெரிக்காவில் அடிமை ஒழிப்பு முறை ஆரம்பமே ஆனது. (போர் நீளும்)



## ஆட்டோசங்கரின் கதை

# துரோகிக்கு என் தண்டனை என்ன தெரியுமா?

## இந்தியாவை உலுக்கிய ஒரு சீரியல் கில்லரின வாக்குமூலம் - 16

சில வருஷங்கள் கழித்து மிக தற்செயலாக மறுபடி தேவியை மவுண்ட் ரோட்டில் சந்தித்தேன். இதயத்தை ஒரு டசின் இடி ஒரே சமயம் தாக்கியது. ஆடிப்போனேன். அவள் தேக்கி வைத்திருந்த அழகும் இளமையும் அதற்குள் எங்கே போயிற்று? ஐஸ்வர்யா ராய் வயதில் ஔவையார் தோற்றம் தருகிறாளே ஏன்?

கதறி அழுதாள் அந்தப் பெண். தனது ப்ளாஷ்பேக்கை கதை கதையாக சொன்னாள். அந்த கோடம்பாக்க கேசவனுக்குக் கல்யாணம் என்பது தினசரி அலுவலாம். ஒவ்வொரு பெண்ணாகக் கட்டிக்கொண்டு அலுத்து சலித்ததும் பம்பாயில் விற்றுப் பணம் பார்த்து விடுவானாம்.

தேவியும் அப்படித்தான் விற்கப்பட்டாள். அங்கே 'ஒர்க்லோடு' ஜாஸ்தி. கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லைதான்... மற்ற விஷயத்தில்! ஆனால், அவளது உத்தியோகத்தில்...? வீ.டி.யாக விஸ்வரூபம் எடுத்தது... எந்த வைத்தியத்துக்கும் வசியப்படாததால் பம்பாய் இவளை ரயிலேற்றி விட்டது. கண்ணைக் கசக்கினாள். அதோடு என் மனசை கசக்கினாள்.

"சரி... இனிமே என்ன செய்யப்போறே?'

"தெரியலைங்க...'

"நீ எதுவும் செய்ய வேணாம்... தனியா ஒரு வீடு பார்த்து குடிவைக்கிறேன்... டாக்டரையும் அனுப்பறேன்.... கவலைப்படாம இரு.'

கண்கலங்க அந்தப் பெண் நன்றியுடன் கை தொழுதது. இத்தனை இழிநிலையில் கூட தனக்கு ஒருவன் சோறு போட்டு காப்பாற்ற சம்மதிக்கிறானே என அவளுக்கு ஆச்சரியம். வாழ்வில், இதைவிடவும் ஆச்சரியமெல்லாம் காத்திருக்கிறது. நாம் பிச்சையெடுத்து, இந்த பணக்காரனுக்கு பின்னால் சோறு போட வேண்டிய தினமெல்லாம் வரும் என அப்போது அவள் நினைத்திருக்கமாட்டாள்.

இன்னொரு புறம்...

என்னிடம் இருந்த பெண்களிலேயே அழகியான உபத்திராவை தன்னோடு கூட்டிக்கொண்டு ஓடிய சுடலை இருக்குமிடம் தெரிந்தது. நானே அங்கு கஸ்டமர் போல போனேன். என்னைப் பார்த்த அவன் அதிர்ச்சியடைந்தான். புதுமணப்பெண் போல தலைகுனிந்தான்.

'செய்றது ப்ராத்தல்னாலும் தொழில்ல ஒரு நேர்மை வேணாமாடா நாயே?"

அவனிடம் பதிலில்லை. மன்னிப்புக் கேட்க வாய் திறந்தான். "எதுவும் பேசாம ஏறுடா வண்டியில" என்றேன். ஸ்கூட்டரை நான் ஓட்ட பின்னே அவன். வழியில் சிக்னலில் வண்டி நிற்க நொடியில் வண்டியிலிருந்து இறங்கி ஓடி, பல்லவன் பஸ்ஸில் ஏறி மறைந்தான். பாவம் அவன் நினைக்கவில்லை, அவன் மனைவி உபத்திரா இருக்குமிடத்தையும் தெரிந்துகொண்டுதான் நான் வந்தேன் என்று.

கையில் சிக்கியும் எஸ்கேப் ஆகிவிட்டான். ஆனால், உபத்திராவை பகடையாக்கியதில், சுடலை தானாய் எனக்கு ஃ போன் செய்தான். உபத்திராவை வீட்டுக்கு அனுப்பினேன். 'அவரை மன்னிச்சுடுங்கண்ணே" என்று கெஞ்சினாள். "அவனை நான் மன்னிச்சா என்னை இங்க இருக்கிறவங்க மன்னிக்க மாட்டாங்களே... அப்புறம் கூட்டத்துல அவன் அவன் 'தப்பு பண்ணுனாலும் அண்ணன் மன்னிச்சுருவாருன்னு நினைச்சு ஆட ஆரம்பிச்சுருவான். ஆறு மாசமாவது அவனை ஆஸ்பத்திரியில் படுக்க வச்சாதான் என் மனசு ஆறும். அவனை உயிரோட விடுறேன். அவ்வளவுதான் உனக்கு நான் செய்ய முடியும்", அவள் பதிலை எதிர்பார்க்காமல் அனுப்பிவிட்டேன்.

சுடலை இருக்கும் இடம் தெரிந்துவிட்டதாக கையாட்களிடம் பரபரத்தேன்.

"என்னண்ணே சொல்றீங்க! அந்த துரோகி இருக்கிற இடம் தெரிஞ்சு போச்சா... சொல்லுங்க! எங்கே இருக்கான்... இப்பவே போய் கொத்துக்கறி போட்டுறுவோம்..."

"சரி புறப்படு" என்றேன்.

"ம்ஹூம்! நீங்க அங்கே வரவேணாம். நாங்க பாத்துக்கறோம்."

"சரி... நான் வரலை! ஆனா நான் சொல்றதைக் கேளு... யாரும் அவனை அடிக்க வேணாம். ரெண்டு கைகளையும் கட்டி கைவிரல்களில் பத்துவிரலுக்கும் மொத்தமா துணி சுற்றி கிருஷ்ணாயில் ஊற்றி கையைமட்டும் கொளுத்திவிடு பாபு... இதைத் தவிர அவன் மேலே உன்னோட விரல்கூட படக்கூடாது! சரிதானா? அதுமட்டுமில்லை. கொளுத்துறதுக்கு முன்னாலே நான் அவன்கிட்டே ஃபோன்ல பேசணும். அவனைப் பேசச் சொல்லுங்க."

ஆட்டோ புகை கக்கினபடியே புறப்பட்டுப் போனது. பாபுவைப் பார்த்ததுமே பேயறைந்தாற் போல் ஆனான் சுடலை. ஒன்றுக்கு முட்டிக்கொண்டு நெருக்கினது. "சங்கரண்ணன் வரலையா?" என்றான் பலவீனமாக.

பாபு முகத்தில் விஷச் சிரிப்பு! சுடலையைத் தன் ஆட்கள் சூழ வண்டியில் ஏற்றிக் கொண்டான்.

"சங்கரண்ணன் வரமாட்டாரா பாபு?" கேட்ட சுடலையை நோக்கி முஷ்டியை வீசினான் பாபு. தாடையில் வெடித்தது. உதட்டோரம் ரத்த நூல் தொங்கிய வாயுடன் கூப்பாடு போட்டான் சுடலை. உடம்பின் ஒவ்வொரு அங்குலத்திலும் தாக்குதல் நடந்தது. கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.

"சங்கரண்ணன் இப்படியெல்லாம் அடிக்கச் சொன்னாரா பாபு?"– முக்கலும் முனகலுமாய் வேதனையுடன் கேட்டான்.

"அடப் போடா... நீ மன்னிப்பு கேட்ட மாதிரி நானும் கேட்டுட்டுப் போறேன்! துரோகம் பண்ணிப்பிட்டு கேள்வி வேறயாடா மவனே!"


பற்களைக் கடித்தபடி காலை மடக்கி முழங்கால்களால், சுடலையின் ரெண்டு கால்களுக்கும் இடைப்பட்ட உறுப்பில் உக்கிரமாகத் தாக்கினான். படாத இடத்தில் பட்ட அடி! போக உறுப்பில் பிசகாய் விழுந்த தாக்குதல்!

அதிபயங்கரமான வலியை வெளிப்படுத்த நினைத்த சுடலை, வாயைத்திறந்த அடுத்த செகண்ட் விறைத்துப்போய் நின்றான். கண்கள் நிலைகுத்தினது. சப்தமில்லாமல் செத்துப் போனான்.

(தொடரும்)

## ஏன் ஏன்? தெரிவோம் தெளிவோம் 05

# பிஞ்சு பிடிக்கும்போது நீர்ப்பாசனம் கூடாது!



கடந்த இதழின் தொடர்ச்சி...

**வடிவம் கொடுப்பதற்காகச் செய்யப்படும் கவாத்தைப் பற்றி விளக்கிச் சொல்ல முடியுமா?**

வடிவம் கொடுப்பதற்காகச் செய்யப்படும் கவாத்தை 'ட்ரெனிங்' (Training) என்று சொல்வார்கள். கடந்த இதழில் இது 'ட்ரிம்மிங்' என்று தவறாக வெளியாகியுள்ளது. ட்ரெனிங் என்பதுதான் சரி. செடி மூன்றடி உயரத்துக்கு வந்தபிறகு ட்ரெனிங்கைத் தொடங்கலாம். செடியின் மேல் பாகத்தில் இருந்து கீழ் பக்கமாகப் பார்த்துக்கொண்டே வந்து... தண்டின் எந்த இடத்தில் பச்சை நிறம் மறைந்து, பிரவுன் நிறம் தொடங்குகிறதோ அந்த இடத்தில் கவாத்துச் செய்ய வேண்டும்.

தரையில் இருந்து இரண்டு அடிக்கு மேல் கவாத்துச் செய்ய வேண்டும். கவாத்து செய்த இடத்தில் பச்சை சாணத்தை வைத்து, காடாத்துணி அல்லது பழைய துணியை வைத்துக் கட்டிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் தண்ணீர் ஆவியாவது குறைக்கப்படும். அதன் பிறகு, கவாத்து செய்த இடத்திலிருந்து ஆறு முதல் எட்டு புதிய கிளைகள் தோன்றும். அதில் முக்கோண வடிவில், தரமான மூன்று கிளைகளை மட்டும் விட்டுட்டு, மற்ற கிளைகளை வெட்டிவிட வேண்டும்.

அந்த மூன்று கிளைகளிலும் ஏற்கனவே சொன்னதுபோல, பசுமை மறையத்தொடங்கும் இடத்தில் கூர்மையான பிளேடு மூலமாகக் கவாத்துச் செய்ய வேண்டும். அதிலிருந்து ஆறு மாதத்தில், கவாத்து செய்த கிளைகளில் புதிய கிளைகள் தோன்றியிருக்கும். அந்த மூன்றாம் நிலை கிளைகளையும் ஏற்கெனவே செய்ததைப்போல, முக்கோண வடிவில் தரமான மூன்று கிளைகளை வைத்துக் கொண்டு மற்றவற்றை வெட்டிவிட வேண்டும்.

இப்படித் தொடர்ந்து செய்வதன் மூலம், மா மரங்களில் தாழ்வான கிளைகள் உருவாகாது. இதை, 'கிளை படர் மேலாண்மை' எனவும் சொல்வார்கள். இதனால், எதிர்காலத்தில் தண்டுப்புழு தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம். தேவையான உயரத்தில் மரத்தைச் சரியாகப் பராமரிக்க முடியும். நல்ல மகசூலும் கிடைக்கும். மரம் வளர்ந்த பிறகு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்தக் கவாத்தைச் செய்ய வேண்டும்.

**மகசூலுக்கான கவாத்து (புருனிங்)பற்றி விளக்கிச் சொல்லுங்கள்?**

மகசூலுக்காகக் கவாத்து செய்யும் மரங்கள் மூன்று வயதைக் கடந்திருக்க வேண்டும். இந்தக் கவாத்து செய்வதால் பூக்கும் கிளைகள் அதிகமாக உருவாகும். ஏற்கெனவே வடிவம் கொடுத்த கிளைகளிலிருந்து அதிகளவு நுனிக்கிளைகள் வரும். அதில் கடந்த ஆண்டுப் பூத்த கிளைகளை விட்டு விடவேண்டும். அதற்கு அருகில் அதற்கும் முந்தைய ஆண்டுப் பூத்த நுனிக்கிளைகள் இருக்கும். அந்தக் கிளைகளில், பசுமை மறையும் இடத்தில் கவாத்துச் செய்ய வேண்டும். இந்த நுனிக்கிளைகள் பென்சில் தடிமனில் இருக்கும். கவாத்து செய்த பகுதியில் பச்சை சாணத்தைப் பூசிவிட வேண்டும். செப்டெம்பர்- ஒக்டோபர் மாதங்களில் மகசூலுக்கான கவாத்தைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் மூன்று புதிய கிளைகள் உருவாகும். டிசம்பர் மாத இறுதிவரை தளிர்கள் உருவாகும். அப்படி உருவாகும் பூந்தளிர் இலைகள், பூக்களை உருவாக்கும். ஜனவரி மாதத்தில் பூங்கொத்துகள் தோன்றும். பூக்கள் பூக்கத் தொடங்கும் நேரத்தில் இளம் இலைகள் மீது பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும்.

பஞ்சகவ்யா தெளிக்கும்போது ஆக்சின் என்ற வளர்ச்சி ஊக்கி குறைந்து, ஜிப்ரலிக் அசிட், சைட்டோசைனின் போன்ற ஹோர்மோன்கள் அதிகமாக உருவாகும். இதனால், அதிகப் பூக்கள் தோன்றும். இந்த ஹோர்மோன்கள் இயற்கையாகவே செடிகளில் சுரக்கும். பஞ்சகவ்யா தெளிக்கும்போது அதிகளவில் சுரக்கும். பூக்களை மரத்தில் தக்க வைப்பதற்காக, மீன் அமினோ அமிலம் தெளிக்க வேண்டும். அதன் பிறகு, பூவிலிருந்து பிஞ்சு இறங்கும். பிஞ்சுகள் உதிராமல் இருக்க, தேமோர்க் கரைசல் அல்லது அரப்புமோர்க் கரைசல் தெளிக்க வேண்டும்.



வடு மாங்காய் சைசுக்குப் பிஞ்சு வந்த பிறகு, காய் திரட்சியாகவும் சுவையாகவும் இருப்பதற்காக, இருபது நாள்கள் இடைவெளியில் ஜீவாமிர்தம் மற்றும் மீன் அமினோ அமிலம் ஆகிய இரண்டையும் சுழற்சி முறையில் கொடுக்க வேண்டும்.

கவாத்துச் செய்யாமல் இருந்தால் ஒரு கிளையில் மட்டுமே பூங்கொத்து தோன்றும். கவாத்து செய்ததால் மூன்று பூங்கொத்துகள் தோன்றும். பிப்ரவரி மாதத்தில் காயாகி, மார்ச்-ஏப்ரல் மாதங்களில் பழங்கள் கிடைக்கும். இதே மரம், கவாத்துச் செய்யாமல் இருந்தால் நாநூறு பூக்கள் எடுக்கும் என வைத்துக்கொண்டால், கவாத்துக்குப் பிறகு, ஆயிரத்து இருநூறு பூக்கள் வரை தோன்றும். ஆண்டுதோறும் கவாத்துச் செய்ய வேண்டும்.

**மா சாகுபடியில் செய்யக்கூடாதது என்ன?**

மாங்கன்றுகள் நடவு செய்த முதல் ஆண்டிலேயே பூவெடுக்கும். இந்தப் பூக்களை உதிர்த்துவிட வேண்டும். பல விவசாயிகள் இளம் செடிகளில் பூக்களை அனுமதித்துக் காய்க்க வைக்கிறார்கள். கண்டிப்பாக அப்படிச் செய்யக்கூடாது. நடவு செய்ததிலிருந்து முதல் மூன்று ஆண்டுகள் வரை பூக்களை உதிர்த்துவிட வேண்டும். அப்போதுதான் மரம் பலமானதாக உருவாகும். மூன்றாண்டுகளுக்கு மேல் பூக்கும் பூக்களைக் காய்க்கவிடலாம்.

அதேபோல, மரம் முழுக்கப் பூக்கள் இருந்தாலும், அத்தனையும் பிஞ்சாக உருவாகாது. குறிப்பிட்ட அளவு மட்டுமே பிஞ்சுகள் தோன்றும். மரத்தில் உருவான பிஞ்சுகள் எல்லாம் காயாக மாறாது. கிளை, எத்தனை காய்களைத் தாங்குமோ, அத்தனை பிஞ்சுகளை மட்டுமே மரம் அனுமதிக்கும். தாங்குதிறனைவிட அதிகமாக உள்ள பிஞ்சுகளை மரமே உதிர்த்துவிடும். எனவே பூக்கள் உதிர்கின்றன, பிஞ்சுகள் கொட்டுகின்றன எனப் பயந்துபோய் அதிக செலவு செய்து மருந்துகளை வாங்கித் தெளிக்கத் தேவையில்லை. ஒரு சில கிளைகளில் ஒரு பிஞ்சுகூடத் தங்கவில்லை என்ற நிலையில், தேமோர்க் கரைசல், அரப்புமோர்க் கரைசல் ஆகியவற்றைத் தெளிக்கலாம்.

பிஞ்சுகள் வடுமாங்காய் அளவு வரும் வரைக்கும் தான் உதிரும். அதற்கு மேல் உதிராது. பிஞ்சுகள் தோன்றிய பிறகு, அது வடு மாங்காய் அளவுக்கு வரும் வரைக்கும் தண்ணீர் கட்டக்கூடாது. பல விவசாயிகள் ஆர்வக்கோளாறு காரணமாக, பாசனம் செய்து விடுகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும். ஜனவரி 15-ம் தேதி முதல் பிப்ரவரி 15ஆம் தேதி வரை தண்ணீர் கொடுக்காமல் காய விடவேண்டும்.

ஒரு சில இடங்களில் இந்தக்காலம் ஓரிரு வாரங்கள் முன்னும் பின்னும் வரலாம். இந்தக் காலகட்டத்தில் பாசனம் செய்தால், கிளைகள் பிஞ்சு ;களை இறக்குவதற்குப் பதிலாகப் புதிய தளிர்களை உருவாக்கத் தொடங்கிவிடும். மரம் முழுக்கப் பிஞ்சு களாக இருக்கிறதே என மனது கேட்காமல் பாசனம் செய்துவிடக் கூடாது. தோப்புகளில் குப்பை கூழங்கள் இல்லாமல் சுத்தமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். மாந்தோப்பில் இலவம் பஞ்சு மரங்களை வளர்க்கக் கூடாது.

மா மரங்களில் உரம் மற்றும் பூச்சி மேலாண்மை பற்றி அடுத்த இதழில்...

பயண அனுபவம் - 2

# ஜெருசலேம் யாத்திரை...!
# கோலோச்சும் தமிழ் மொழி

-ஏ.ஜே.ஞானேந்திரன்-



ஒலிவ் மலை தேவாலயத்தில் உலக மொழிகளின் எழுதப்பட்ட ஜெபம்

**10,000 வருட பழைமையான ஜெரிக்கோ நகரம்**

நெடுத்து வளர்ந்த பேரீச்சை மரங்களின் தலையசைப்புடன் ஜெரிக்கோ நகரம் எங்களை வரவேற்றது. நாம் முதலில் கால் பதித்த நகரமும் இதுதான். நகரம் என் மனதையும் மிகவும் கவர்ந்தது. புவியிலுள்ள மிகவும் தாழ்வான பிராந்தியம் ஜெரிக்கோ. கடல்மட்டத்திலிருந்து 1300 அடி தாழ்வாக உள்ள நகரம் இது. மிகப் புராதனமான இந்த நகரின் வயது 10,000 வருடங்கள் என்கிறார்கள்.

ஜோர்தான் நதிக்கு அண்மையில் அமைந்துள்ள அழகிய நகரம் இது. புனித பைபிளுடன் சம்பந்தப்பட்ட நகரமும் கூட! நறுமணம் என்ற பொருள்படவே இதன் பெயர் அமைகின்றது. அரபு மொழியில் எரிக்கோ என்று அழைக்கிறார்கள்.

1948தொடக்கம் 1967 வரை இந்நகரம் ஜோர்தான் கைவசம் இருந்தது. 1967 இல் இஸ்ரவேல் வசமானது. 1994 தொடக்கம் இந்நகரின் நிர்வாகப் பொறுப்பை பலஸ்தீனிய அதிகார சபை பொறுப்பேற்றுள்ளது.

"பயணங்கள் என்பது ஒரு நெடு நாவலை வாசிப்பது" போன்ற உணர்வை வழிநெடுக தரும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். இதில் சந்தேகமே இல்லை. இந்த நகருக்குள் நுழைந்தபோது, மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். "மவுண்ட் ஒவ் ரெம்ரேஷன்" என்ற பிரபல்யமான உணவகத்தின் நுழைவாயில் மிக அழகாக இருந்தது. இங்கே தாராளமாகப் பரிமாறப்பட்டிருந்த உணவு வகையாறாக்கள், அரபு கலாசாரத்தை முன்னிழுத்து நிறுத்தின.

இந்த உணவுகள் எனக்கு புதிதல்ல. எண்பதுகளில் எட்டு வருடங்களை வாழ்ந்து கழித்தபோது இவற்றையெல்லாம் தாராளமாகச் சாப்பிட்டேன். என்றாலும் மீண்டும் இவற்றை நேரில் உண்ணும் வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சியை அளித்தது. பாலைவன நாடுகளான அரேபியாவில் மாமிசம் மிக முக்கிய உணவு. உலர் பழங்கள், பார்லி, கோதுமை, அரிசி, பால் பொருட்கள், மாமிசம் மற்றும் ஏராளமான மசாலா பொருட்களுடன் கண்ணுக்கும் நாவுக்கும் விருந்தளிப்பவை அரேபிய உணவுகள்!

ஜெறிக்கோ நகரிலும் சாப்பிடக் கிடைத்தது அரபு உணவுதான். ஒலிவ் பழங்கள் சாப்பாட்டுடன் எப்பொழுதும் இருக்கும். மிக ஆரோக்கியமானது. ஆனால் மிளகாய்த் தூள் கலந்து உறைக்க உறைக்க கறி சாப்பிடுபவர்களுக்கு, இந்த உணவு ஒருவேளை "காரசாரம்" இல்லாமல் இருக்கலாம்.

**ஒலிவ் மலையில் தமிழில் ஜெபம்**

இயேசுவின் வாழ்க்கையோடும், பைபிள் செய்திகளின்படியும் சாத்தானால் சோதிக்கப்பட்ட மலைப் பிராந்தியமே எமது அடுத்த பயணமாக இருந்தது. இதைக் குவாரன்ரால் மலை என்றும் அழைக்கிறார்கள்.

இது ஜெரிக்கோ நகருக்கு வடமேற்காக 7 மைல் தூரத்தில் இருக்கின்றது. சாக்கடலின் விரிந்த பரிணாமம் இங்கிருந்து நன்றாகத் தெரிகின்றது. கீழே ஜெரிக்கோ பள்ளத்தாக்கைக் காணமுடியும். கிழக்காக உள்ள சரிவுப் பகுதிகளில் உள்ள குகை போன்ற பகுதிகளில் துறவிகள் வாழ்ந்து வருகி றார்கள். கத்தோலிக்க மதம் தோன்றிய காலம் தொட்டு இவர்கள் இங்கிருக்கின்றனர் என அறியப் படுகின்றது. இந்தக் குகைகளை ஒட்டி கிரேக்க ஓர்தொடொக்ஸ் மடமொன்றும் உள்ளது.




ஒலிவ் தேவாலயத்தில் தமிழில் எழுதப்பட்டுள்ள ஜெபம்

ஒலிவ் மலை என்பது ஜெருசலேம் பழைய நகருடன் கிழக்கிலிருந்து இணையும் மலைத் தொடராகும். இதன் சரிவுப் பகுதிகளை ஒலிவ் மரங்கள் மூடியிருந்ததால் இதற்கு ஒலிவ் மலை எனப்பெயர். இதன் தென் பகுதி பண்டைய யூதேய அரசின் இடுகாடாகவிருந்தது. இம்மலை யூதப் பாரம்பரியத்தின் மத்தியமாகவிருக்கிறது. இது 3,000 வருடங்களாக யூதர்களின் இடுகாடாக இருந்து வந்து, கிட்டத்தட்ட 150,000 சமாதிகளைக் கொண்டுள்ளது. சுற்றிவர இருக்கும் சமாதிகளைப் பார்த்தபடி நடந்தோம். என்றோ ஒரு காலத்தில் வாழந்தவர்கள் இங்கே புதைக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுடன் பல சரித்திரங்களும் புதைந்து கிடக்கின்றன. இவர்கள் ஒருவேளை உயிர்பெற்று வந்தால், கத்தனை உண்மைகளை அறிந்து கொள்ள முடியும் என்றொரு விபரீதக் கற்பனை மனதில் ஓடியது.

இயேசுவின் வாழ்வின் சில முக்கிய சம்பவங்கள் நற்செய்திகளில் தொடர்புள்ளவாறு இங்கு இடம்பெற்றுள்ளன. திபணிகள் இங்கிருந்துதான் இயேசு விண்ணகம் சென்றார் எனக் குறிப்பிடுகின்றார்கள். இயேசுவுடனும் மரியாளுடனும் இப்பகுதி தொடர்பு பெறுவதால் பண்டைய காலந்தொட்டு இன்று முதல் கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத்தலமாகவும் கிழக்கு, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் முக்கிய யாத்திரைத் தலமாகவும் இது விளங்குகின்றது. இயேசுவின் ஜெபம் இங்கு பல உலக மொழிகளில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து வியந்தோம்.

பல ஐரோப்பிய மொழிகளிலும், வட அமெரிக்க, தெனைமெரிக்க மொழிகளிலும், அழகாக ஜெபம் எழுதப்பட்டிருந்தது. ஜெருசலேம் ஒலிவ் மலை தேவாலயத்தில் தமிழில் எழுதப்பட்ட இயேசுவின் ஜெபம். இங்கு பல மொழிகளில் காணப்பட்டாலும், ஆசிய மொழிகளிலே தமிழ் மட்டுமே உள்ளது. சிங்களத்திலும் இந்தச் ஜெபம் எழுதப்பட்டிருப்பதை தேவாலயச் சுவரில் காணமுடிந்தது.

**ஒரு நகரில் உறையும் மும்மதங்கள்**

Dome of the Rock என்ற ஆங்கிலப் பதத்திற்கு விக்கிபீடியாவில் பாறைக் குவிமாடம் என்ற சொல்லைப் பிரயோகித்திருக்கிறார்கள். நாம் அடுத்ததாகப் பயணித்த இடம் இதுதான். பழைய ஜெருசலேம் நகரில் ஒரு யூதத் தேவாலயம் இருக்கின்றது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள ஒரு புண்ணிய தலமே பாறைக் குவிமாடம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இந்தக் குவிமாடம் பற்றி மேலே எழுதும் முன்னர் ஜெருசலேம் பற்றிய நடப்பு நிலைமையை எழுதுவது, இந்தப் பயணக் கட்டுரையை மேற்கோண்டு வாசிப்பவருக்கு சில குழப்பங்களைத் தீர்க்கலாம்.

இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கும் பெயர் ஜெருசலேம். மூன்று மதங்களின் புனிதத் தலமாக விளங்கும் இந்த நகரம், மிக மோசமான மோதல்களை சந்தித்தது மட்டுமன்றி,



ஜெரிக்கோ நகரில் கட்டுரையாளர்

உலகின் மிகுந்த சர்ச்சைக்குரிய பிராந்தியமாகவும் பார்க்கப்படுவது ஏன் என்று நோக்கும்போது, பல சுவாரஸ்யமான தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஒன்றுபட்ட ஜெருசலேம் தனது தலைநகர் என்று இஸ்ரேல் கூறுகிறது. (நாங்கள் ரெல் அவிவ்தான் இஸ்ரவேலின் தலைநகரம் என்று படித்திருந்தோம்.) அரபு-இஸ்ரவேல் போரில் 1967 இல் கிழக்கு ஜெருசலேமை தனது கட்டுப்பாட்டிற்குள் இஸ்ரவேல் கொண்டு வந்தது. எதிர்காலத்தில் உருவாக்கப்படும் தன்னுரிமை கொண்ட பலஸ்தீன நாட்டின் தலைநகராக ஜெருசலேம் இருக்கும் என்பது பலஸ்தீனர்களின் வாதம்.

(பயணிப்போம்)

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

**13.02.2019 – 31.08.2020 வரை**

**கே.பி.வித்தியாதரன்**







**முற்போக்கு சிந்தனை கொண்ட மேஷ ராசி அன்பர்களே!**

13.2.19 முதல் 31.8.20 வரை உங்கள் ராசிக்கு ராகு, கேதுவின் சஞ்சாரத்தால் உற்சாகம் பொங்கும். மங்கல காரியங்கள் ஸித்திக்கும். வீடு கட்டும் கனவு நிறைவேறும் பெண்களின் எண்ணம் பூர்த்தியாகும்.

### ராகு பகவான் அருளும் பலன்கள்

உங்களைப் பல வழிகளிலும் அலைக்கழித்துக் கொண்டிருந்த ராகு, தற்போது 3 ஆம் இடத்துக்கு வருகிறார். புதிய முயற்சிகள் பலிதமாகும். தாயாருக்கு மருத்துவச் செலவுகளையும், அவருடன் மனஸ்தாபத்தையும் ஏற்படுத்திய நிலை மாறும். சோம்பல், அலட்சியம் நீங்கி உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

சவாலான விசயங்களையும் சர்வ சாதாரணமாகச் செய்து முடிப்பீர்கள். வீட்டில் இதுவரை ஏற்பட்ட பதற்றம், மன உளைச்சல் நீங்கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். கணவன்-மனைவிக்கிடையே குழப்பம் ஏற்படுத்தி, கலகம் விளைவித்த நபர்களை அடையாளம் கண்டு, ஒதுக்கித் தள்ளுவீர்கள். அரைகுறையாக நின்ற பல வேலைகளை எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

வசூலாகாத கடன் திரும்பக் கிடைக்கும். அதேபோல், நீங்கள் வாங்கிய கடன்களையும் கொடுப்பீர்கள். உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு உறவினர்கள் வியப்பார்கள். பிள்ளைகளின் நியாயமான ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். கல்யாணம் தடைப்பட்டுக் கொண்டிருந்த மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். மகளின் திருமணத்தை விமர்சையாக நடத்தி முடிப்பீர்கள். திருமணம் ஆகி, குழந்தை பாக்கியம் இல்லாமல் கஷ்டப்பட்டவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.

சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். தாய்வழி உறவினர் மத்தியில் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். நீங்கள் வெகுநாள்களாக மனதுக்குள்ளேயே கட்டிவைத்திருந்த கனவு வீட்டை, இப்போது நிஜமாகக் கட்டும் வாய்ப்பு அமையும். வங்கிக் கடனுதவியும் கிடைக்கும். சிலர், இருக்கும் வீட்டை விரிவுபடுத்துவீர்கள்.

பெண்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும். அவர்களுக்குப் பெற்றோரின் ஆதரவு உண்டு. தடைப்பட்ட கல்வி தொடரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அடைவில் இருந்த நகைகளை மீட்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட நஷ்டங்களை இனி ஈடுகட்டும் அளவுக்கு உங்களின் அணுகுமுறை மாறும். போட்டியாளர்களே திகைக்கும் அளவுக்குப் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். பழைய பாக்கிகளைக் கறாராகப் பேசி வசூலிப்பீர்கள்.

உத்தியோகத்தில், அலட்சியப்படுத்திய மேலதிகாரி, இனி உங்களுக்கு இணக்கமாக இருந்து, ஆதரவு தருவார். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வும் கிடைக்கும்.

### கேது பகவான் அருளும் பலன்கள்

இதுவரை, உங்கள் ராசிக்குப் பத்தாமிடத்தில் அமர்ந்து எந்தப் பணிகளையும் செய்யவிடாமல், தடுமாற்றத்தையும், தயக்கத்தையும், வீண் குழப்பத்தையும், பழியையும் தந்த கேதுபகவான், இப்போது ராசிக்கு ஒன்பதாமிடத்தில் அமர்கிறார். ஆகவே, சமயோசித புத்தியுடன் செயற்பட வைப்பார். குடும்பத்தில் நிலவி வந்த குழப்ப நிலை மாறும். வாழ்க்கைத்துணையின் பேச்சுக்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியம். பணப்பற்றாக்குறை நீங்கும். வருங்காலத்துக்காகச் சேமிக்கவும் செய்வீர்கள். உடன் பிறந்தோரின் ஆதரவு உண்டு.

உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். இரத்த அழுத்தம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவருடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து, அனுசரித்துச் செல்லுங்கள். தந்தை வழி சொத்துகளால் அலைச்சல்களும், செலவுகளும் ஏற்படும். அடிக்கடி பணம் கேட்டு நச்சரித்த உறவினர்கள் உங்களின் நிலைமையைப் புரிந்துகொள்வார்கள். வேலையின்றி தவித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். அயல்நாட்டு வாய்ப்புகள் தேடி வரும்.

வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். வேலையாள்களின் ஒத்துழைப்பு மிக நன்றாக இருக்கும். உத்தியோகத்தில், தேங்கிக்கிடக்கும் பணிகளை விரைந்து முடிக்கவேண்டியது அவசியம். பணி சார்ந்து நிலுவையில் இருக்கும் வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

மொத்தத்தில் இந்த ராகு-கேது பெயர்ச்சி, ஒரு தீர்வு கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்த உங்களுக்கு நல்ல தீர்வை தருவதாகவும், உங் களைச் சாதிக்க வைப்பதாகவும் அமையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அம்பாளுக்கு நெய் தீபம் ஏற்றிவைத்து, சர்க்கரைப் பொங்கலும் செவ்வரளி மாலையும் சமர்ப்பித்து வழிபடுங்கள் சகலமும் நன்மையாகவே அமையும்.




**மேன்மையான குணம் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே,**

13.2.19 முதல் 31.8.20 வரை உங்கள் ராசிக்கு ராகு, கேதுவின் சஞ்சாரம் பல நன்மைகளை வாரி வழங்கப்போகிறது.

### ராகு பகவான் அருளும் பலன்கள்

ராசிக்கு 3 இல் இருந்தபடி புதிய திருப்பங்களுடன், பண வரவு, பிரபலங்களின் நட்பு என்று பலன்களைத் தந்த ராகு, தற்போது 2 இல் அமர்ந்து பலன் தரவிருக்கிறார்.

ஆகவே, தடைப்பட்டு வந்த பல காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால் அவர், வாக்கு ஸ்தானத்தில் இருப்பதால், பேச்சினால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். சமயோசிதமாகச் சிந்தித்துப் பேசவேண்டியது அவசியம். நீங்கள் நல்லதைச் சொல்லப் போய் சிக்கலில் மாட்டிக் கொள்ளும் சூழல் ஏற்படும். மற்றவர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம்.

குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். எதிர்பாராதச் செலவுகளும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் அவ்வப்போது மனஸ்தாபங்கள் வந்து போனாலும், மகிழ்ச்சிக்குக் குறையிருக்காது. தடைப்பட்டு வந்த சுபகாரியங்கள் சிறப்பான முறையில் நடைபெறும்.

பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கும் வகையில், உங்களின் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வீர்கள். சகோதர சகோதரிகளுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, அவர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். உங்களிடம் பணம் வாங்கி ஏமாற்றியவர்கள், இப்போது திருப்பித் தருவார்கள். வெகுநாள்களாகச் சந்திக்காமலிருந்த நண்பர்கள் இப்போது தேடி வருவார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளிடம் இருந்த முரட்டு குணமும் பிடிவாதப் போக்கும் மாறும்.

மகளுக்கு நீங்கள் விரும்பியபடியே வெளிநாட்டு வரன் அமையும். மகனுக்கு உயர்கல்வியைத் தொடர்வதில் இருந்துவந்த பிரச்னைகள் நீங்கும். அடிக்கடி வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடுவதால், சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட நேரிடலாம் கவனம் தேவை. வெளியிடங்களில் எவரையும் விமர்சித்துப் பேசவேண்டாம். ஆவணங்களில் கையெழுத்திடும்போது ஒன்றுக்கு இரண்டு முறை படித்துப் பார்த்து கையெழுத்துப் போடுவதன் மூலம் வில்லங்கம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். (மறு பக்கம் பார்க்க...)

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

இந்த ராசியைச் சேர்ந்த பெண்கள், இதுவரை இருந்துவந்த சோம்பலும் தயக்கமும் மாறி, சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். பொருள் சார்ந்து சிற்சில இழப்புகளும் நஷ்டங்களும் உண்டாகலாம். ஆகவே, விலையுயர்ந்த பொருள்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

வியாபாரத்தில் பழைய பிரச்சினைகளைத் தீர்க்க புது வழி கிடைக்கும். முன்பு போல் நஷ்டம் ஏற்படாமல் இருக்க, புதுப் புது யுக்திகளைக் கையாண்டு லாபத்தைப் பெருக்குவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். கடையை அழகு படுத்துவீர்கள். உத்தியோகத்தில், உங்களுக்குத் தொல்லை தந்து வந்த மேலதிகாரி, இனி உங்களிடம் இணக்கமாக நடந்துகொள்வார். அவர்களால் உங்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். உங்களது பொறுப்புணர்ச்சியைக் கண்டு, சலுகைகளுடன் பதவி உயர்வும் தருவார்.

### 20 கேது பகவான் அருளும் பலன்கள்

இதுவரை ராசிக்கு 9-ல் இருந்த கேது, தந்தையின் ஆரோக்கியத்தில் பாதிப்பைத் தந்ததுடன், அவருடன் தேவையற்ற மனஸ்தாபங்களையும் ஏற்படுத்தினார். தற்போது கேது 8இல் இருப்பதால் கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் மன நிம்மதிக்குக் குறைவிருக்காது.

நீங்களாக ஒரு முடிவுக்கு வராமல், எந்த விஷயத்திலும் குடும்பத்தினருடன் ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது. அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவேண்டாம். வெளிவட்டாரத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்று வீர்கள். மற்றவர்களுடன் கனிவாகப் பேசுவது அவசியம். கணவன் - மனைவிக்கிடையே போட்டி மனப்பான்மை இல்லாமல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது அவசியம். உறவினர்கள் உங்களிடம் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

திடீர்ப் பயணங்களால் கையிருப்பு கரையும். அவ்வப்போது மனதில் இனம் தெரியாத அச்சம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். யோகா, தியானம் ஆகியவற்றில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வேலையாள களிடம் விட்டுக்கொடுத்துச் செல்வது அவசியம். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வரும்.

மொத்தத்தில் இந்த ராகு - கேது பெயர்ச்சி, அலைச்சலையும் வீண் அச்சத்தை ஏற்படுத்துவது போல் இருந்தாலும், அதீத ஆதாயத்தையும் செல்வாக்கையும் பெற்றுத் தருவதாக அமையும்.



தினமும் விநாயகப்பெருமானை தவறாமல் வழிபடுங்கள். அருகிலுள்ள ஆலயம் சென்று பிள்ளையாருக்கு அறுகம்புல் சமர்ப்பித்து வழிபடுங்கள் வாழ்க்கை செழிக்கும்.

## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்**



**கலகலப்பான பேச்சும் துடிப்பும் மிகுந்த மிதுன ராசி அன்பர்களே!**

உங்களுக்கு இந்த ராகு, கேது சஞ்சாரம் 13.2.19 முதல் 31.8.20 வரையிலும் மாறுபட்ட பலன்களை அருளப் போகிறார்கள். தெய்வ பலம் கைகூடும்.

### ராகு பகவான் அருளும் பலன்கள்

இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டாவது வீட்டில் உட்கார்ந்துகொண்டு மனப் போராட்டங்களையும், வீண் அலைச்சலையும், காரியத் தடைகளையும் கொடுத்து வந்த ராகுபகவான், இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமர்கிறார். ஆகவே, உங்கள் பேச்சில் இனி முதிர்ச்சி தெரியும். உங்களை சிலர் அவமதித்து பேசினாலும் அதற்குத் தக்கபதிலடி தருவீர்கள்.

குடும்பத்தில் அவ்வப்போது வாக்கு வாதங்கள் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. பிள்ளைகளின் உடல்நிலை சீராகும். அவர்களின் வருங்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். படிப்பின் மீது இருந்த அலட்சியம் மாறும். இருந்தாலும் பிள்ளைகளின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். அவரின் கல்யாணத்தை உறவினர்கள், நண்பர்கள் மெச்சும்படி நடத்துவீர்கள்.

பண வரவு அதிகரிக்கும் என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவினங்கள் வரும். வீண் கௌரவத்துக்காகப் பணத்தை வாரி இறைக்காதீர்கள். தலைச்சுற்றல், முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சி வேகத்தில் முடிவுகள் எடுக்கவேண்டாம். உடன்பிறந்தவர்கள் இனி தேடி வந்து உதவுவார்கள். தாயாரின் உடல்நலம் சீராகும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தெய்வ பலத்தால் பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றல் கிடைக்கும்.

உறவினர்களில் சிலர், உங்களின் நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் உதவி கேட்டு வந்து நிற்பார்கள். வீண் பகை, மனக் கசப்புகள் வரும். வெளி உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள். நேரம் கடந்து சாப்பிடும் வழக்கத்தையும் மாற்றிக் கொள்ளுங்கள்.

**கன்னிப்பெண்களே!**

மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்காதீர்கள். பெற்றோரின் பேச்சுக்குச் செவிசாயுங்கள். தடைபட்ட கல்யாணம் கூடி வரும். இசை, நடனத்தில் சிறந்து விளங்குவீர்கள். அரசியல்வாதிகள் தலைமையை விமர்சித்துப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. உட்கட்சி பூசலில் தலையிடவேண்டாம்.

வியாபாரத்தில் மற்றவர்கள் சொல்கிறார்கள் என நம்பி, எந்தவொரு காரியத்திலும் ஈடுபட வேண்டாம். அதேபோல், பெரிய முதலீடுகளையும் இந்த காலகட்டத்தில் தவிர்க்கவும். இருப்பதை வைத்து லாபம் சம்பாதிக்கப் பாருங்கள்.

உத்தியோகத்தில், உங்களின் திறமையை அனைவரும் உணர்வார்கள். தடைப்பட்ட உரிமைகளும் சலுகைகளும் இனி தாமதமின்றி கிடைக்கும்.

### கேது பகவான் அருளும் பலன்கள்

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் உட்கார்ந்துகொண்டு நிம்மதி இல்லாமலும், சரியான தூக்கமில்லாமலும் துரத்தியடித்த கேது பகவான் இப்போது ராசிக்கு ஏழாவது வீட்டில் அடியெடுத்து வைக்கிறார்.

உங்கள் ஆழ்மனதில் இருந்த பயம் விலகும். எதிர்ப்புகள் அடங்கும். உங்களைக் குறை கூறியவர்கள் இனி புகழ்ந்து பேசுவார்கள். உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிரபலங்களின் அறிமுகமும் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்கால நலனுக்காக முக்கிய திட்டங்களை தீட்டுவீர்கள்.

உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பார்கள். சகோதரியின் திருமணத்தை கோலாகலமாக நடத்துவீர்கள். 7 ஆம் வீட்டில் கேது அமர்வதால் கணவன், மனைவிக்குள் அவ்வப்போது காரசாரமான விவாதங்கள் வந்துபோகும். எனினும், ஒருவருக்கொருவர் சந்தேகப்படுவதை தவிர்க்கவும். அந்தரங்க விஷயங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

நன்றி மறந்த வர்களை நினைத்து அவ்வப்போது வருத்தப்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். குலதெய்வத்துக்கான நேர்த்திக்கடனை நிறைவேற்றுவீர்கள்.

வியாபாரத்தில் போட்ட முதலை எடுப்பதற்கே பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். பங்குதாரர்களுடன் கருத்துமோதல்கள் வந்து நீங்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். வேலையாள்களிடம் தொழில் ரகசியங்களை வெளியிடவேண்டாம். உத்தி யோகத்தில் பதவி உயரும். மேலதிகாரியை பகைக்கவேண்டாம். எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் நேர் பாதையில் செல்வது நல்லது.




மொத்தத்தில் இந்த ராகு, கேதுப் பெயர்ச்சி, கவலைகளிலிருந்து உங்களை விடுவிப்பதுடன், யதார்த்தமான முடிவுகளால் முன்னேற வைப்பதாக அமையும்.

உங்களுக்குப் பெருமாள் வழிபாடு துணை சேர்க்கும். எதிர்காலம் சிறக்க, திருவோண விரதம் இருந்து பலன் பெறுங்கள்.

மிகுதி அடுத்த வாரம் ...

# கோடரிக் காம்பாகும் மறவன்புலவு சச்சிதானந்தன்



சேரமான்

'இது இந்து - பௌத்த நாடு ஏனையவர்களுக்கு இங்கே இடமில்லை" என ஓங்கிக் குரல் எழுப்பி ஒட்டுமொத்த இலங்கையையும் சமீப காலத்தில் தன் பக்கம் ஈர்த்தவர் மறவன்புலவு சச்சிதானந்தன்.

முன்னதாக இந்தியாவின் தீவிர இந்துத்வா கொள்கையின் வழி நின்று தமிழர் விரோதப் போக்கைக் கொண்டிருந்த சிவசேனா கட்சியின் பெயரிலேயே இங்கும் ஓர் அமைப்பை தொடங்கியிருந்தார். ஈழம் சிவசேனா ஆரம்பிக்கப்பட்ட சில நாள்களிலேயே போராட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து மதத் துவேஷத்தைத் தூண்டும் விதமான கருத்துகளைக் கூறி வந்த அவர், திடீரென சமூக ஏற்றத் தாழ்வுகளை உருவாக்க முனைந்து விட்டார். அவரின் இந்த சாதி மைய நடவடிக்கை சமூகத்தில் ஓரளவுக்கு வெற்றியைக் கொடுத்தது. ஆனால் ஈழம் சிவசேனா அமைப்புக்குள் அது மாறாக அமைந்து விட அவரது அமைப்பில் இருந்த பலர் விலகிக் கொண்டனர். இந்து சமயத்தில் தீவிரப் பற்றும் - சிறந்த ஆளுமையும் கொண்ட மறவன்புலவு சச்சிதானந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நீண்டகால மத்திய குழு உறுப்பினராக இருந்தவர், 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிப்பதை எதிர்த்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகின் பல நாடுகளில் பணியாற்றிய அனுபவம் மிக்கவர் சச்சிதானந்தன். ஈழப்போராட்டம் ஆரம்பித்த காலத்தில் - 1980 களில் இந்தியாவுக்கு சென்றிருந்தார். இந்தியாவுக்கு ஆதரவான கருத்துப் போக்கைக் கொண்ட இவர் இந்தியப் புலனாய்வு அமைப்பான றோவுடன் நெருக்கமான உறவு கொண்டவர் என்ற வலுவான குற்றச்சாட்டும் தமிழ் மக்களிடையே உண்டு.

போர் முடிந்த பின்னர், இலங்கைக்குத் திரும்பியவர் சகல அரசியல் கட்சிகளோடும், இராணுவ நிகழ்வுகளிலும் பங்கேற்று வந்தார். இந்திய தூதரகம், துணைத் தூதரக நிகழ்வுகளில் தவறாமல் பங்குபற்றுபவர். எத்தகைய பலமான பாதுகாப்பு போடப்பட்டாலும் அங்கே இலகுவாக நுழைந்து வெளியே வருவார். இத்தகையவர் அண்மையில் மரணமான ஜார்ஜ் பெர்னாண்டஸ ின் மரணம் குறித்து வெளியிட்ட நினைவுக் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

'இந்தியப் படைகளை மீளழைக்க வேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் குரல் 1989 ஆனியில் ஓங்கி ஒலித்த நாள்களில், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அண்டன் பாலசிங்கம், ஜார்ஜ் பெர்ணாண்டசுடன் தொடர்பு கெண்டார். இந்தியப் படைகள் விலகினால் விடுதலைப் புலிகளைப் பிரேமதாசா அழித்துவிடுவார் எனக் கூறினார். பாலசிங்கத்தை ஜார்ஜ் பெர்ணாண்டஸ் கமுக்கமாகச் சந்தித்ததாகவும் செய்தி உண்டு." என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

ஜார்ஜ் பெர்னாண்டஸின் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கு - தமிழர்களுக்கு ஆதரவாகவே எப்போதும் இருந்தன. விடுதலைப் புலிகள் ஜார்ஜ் பெர்னாண்டஸிடம் சில உதவிகளை - கோரிக்கைகளைப் நேரடியாகப் பெற்றிருந்தனர். விடுதலைப் புலிகளுக்கு அவர் நெருக்கமாகவும் - உதவியாகவும் இருந்ததை வைத்துத்தான், இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸை குறுக்கு வழியில் வீழ்த்தி அவரை வீட்டுக்கு அனுப்பினார்கள். அதை தமிழர்களாகிய நாம் மறந்துவிட முடியாது. ஆனால், ஒருபோதும் விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்தை இலங்கையில் நிலைகொள்ளுமாறு கேட்டிருக்கவில்லை. உண்மைக்கு மாறான - ஆதரமற்ற செய்தியை நினைவுக் குறிப்பில் வரைந்ததன் மூலம் மறவன்புலவு சச்சிதானந்தன் கூறவருவது என்ன?

இரண்டாம் கட்ட ஈழப்போர், அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவத்துக்கு எதிராகவே இடம்பெற்றது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தந்திர வலையில் விழுந்த இந்திய இராணுவம் இலங்கை இராணுவத்துக்குப் பதிலாகப் போரை நடத்தியது. இந்தப் போரின்போது கொலை, கொள்ளை, வன்புணர்வு என சகலமுறைகளிலான அடக்குமுறைகளையும் தமிழ் மண்ணில் கட்டவிழ்த்து விட்டிருந்தது. அத்துடன் விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் அழித்துவிடும் நோக்கில் செயற்பட்டது. அத்துடன் தமக்கு விசுவாசமான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற அமைப்புகளை தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக நிலை நிறுத்த முனைந்தது.

இவ்வாறான செயல்களைப் பொறுக்காமல்தான் இந்தியப் படைக்கு எதிராக விடுதலைப் புலிகள் ஆயுதத்தைத் தூக்கினர். இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள், கொலை வெறிச் செயற்பாடுகள் பொறுக்க மாட்டாமல் இந்தியப் படை திரும்பிப் போக வேண்டும் என மக்கள் போரட்டங்களை நடத்தியிருந்தனர். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கமும் இந்தியப் படைகள் திரும்பிச் செல்ல வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். தமிழ் மக்களோ அன்றி விடுதலைப் புலிகளோ இந்தியப் படை இங்கிருக்க வேண்டும் என விரும்பியிருக்கவில்லை. இந்தியப் படை இருக்க வேண்டும் என விரும்பியவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ அமைப்பினரே.

இப்போது மறவன்புலவு சச்சிதானந்தன் தன் இனத்தை அழிக்க கோடரிக் காம்பு கொடுத்த மரம் போல தமிழர்களின் வரலாற்றை மாற்றும் - இந்தியப் படையின் கொடூரத்தை - அட்டூழியத்தை - அடக்குமுறையை மறைக்கும் விதமான கருத்தை வெளியிட்டுள்ளார். போர் முடிந்த பிற்பாடு தமிழர் பகுதிகளில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட நினைவுத்தூண்கள், வரலாற்று ஆவணங்கள் மெல்ல மறைகின்றன - அழிக்கப்படுகின்றன. இதை இந்தியத் துணைத் தூதரகமே முன்னின்று நடத்துகிறது. இவ்வாறான ஒரு நடவடிக்கையிலேயே மறவன்புலவு சச்சிதானந்தனும் ஈடுபட்டுள்ளாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தீபம்
தொடர்புகளுக்கு : ஆசிரியர் பீடம் : 0214927562
விநியோகம், விளம்பரம் : 021 4927542, 0771989445
செய்திகளுக்கு: deepamjaffna@gmail.com
இல.10, வில்வம் தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# அந்த... ஒரு நிமிடம்

——— எஸ்.கணபதி

அந்த ஒரு நிமிடம் என்ற இத்தொடரில் ஒரு சம்பவம் நடைபெற்ற அந்த நிமிடத்தில் அதில் சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் இருந்த மனோநிலை பற்றிக் கூறப்படுகிறது. சம்பவம் உண்மையோ அல்லது புனைவோ என்றது இங்கே முக்கியமல்ல. அது கற்றுத் தரும் பாடமும் வாசகர்கள் அதிலிருந்து பெறும் படிப்பினையும்தான் மிகவும் முக்கியமானது. இதிலே அவ்வப்போது துக்கமும் சந்தோசமும் கலந்து வரும். ஜீரணியுங்கள்.

கொழும்பிலிருந்து அந்த புதிய ஹை-ஏஸ் ரக வாகனம் யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அன்றைய தினத்திற்கு முன்தினம் மாலைதான் அது யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு அடுத்தநாள் அதிகாலையில்தான் கொழும்பை வந்தடைந்தது. அந்த வண்டியின் சொந்தக்காரரும் அவரின் சாரதியுமே அதில் பயணித்திருந்தனர். வண்டியின் சொந்தக்காரர் ஒரு வாகன வியாபாரி. பிறர் உபயோகித்த வாகனங்களை வாங்கித் திருத்தி அழகுபடுத்தி அதனை விற்பனை செய்வதை வியாபாரமாகக் கொண்டவர்.

அன்றும் அப்படித்தான் ஒரு வாகானத்தைக் கொள்வனவு செய்வதற்காக அவர் கொழும்புக்கு வந்து அதற்கான பணத்தைச் செலுத்திவிட்டு யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டிருக்கிறார். அவரின் ஒழுங்கின்படி வாகனத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவருகின்ற பணியை வாகனத் தரகரான அவரது நண்பர் பொறுப்பேற்றிருந்தார். நீண்டகாலம் அவர் அந்தத் தொழிலில் இருப்பதால் அவருக்கு அந்தத் துறையிலுள்ளவர்கள் அனைவரும் அத்துபடி.

வாகனத்தைப் போய்ப்பார்த்து அதனுடைய சொந்தக்காரருடன் விலைபேசி முடித்து அதற்குரிய பணத்தை வங்கியில் பெற்றுச் செலுத்திப் பின் அதற்குரிய பத்திரங்களையும் எழுதி முடித்துச் சரிபார்த்துப் பின் மதிய உணவைச் சாப்பிடும்போது மாலை 4.00 மணியை எட்டிவிட்டது. இரவு 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் திரும்ப வேண்டும் என்பது முதலாளியின் முடிவு. அதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்போது உறவினர் ஒருவர் அவரிடம் கொடுத்த உணவுப் பொருட்கள் அடங்கிய பார்சலை அதற்குரியவரிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்ப வேண்டும்.

கொழும்புத் தெருக்களில் காணப்படும் வழமையான வாகன நெருக்கடிகளைத் தாண்டி வேகமாகப் பயணிப்பதென்பது இயலாத் காரியம். இருந்தாலும் அவரது வாகனச் சாரதி தனது முதலாளியின் அபிலாஷைகளை நிறைவேற்றியவாறு வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். இரவு புறப்படும் முன்னர் ஒரு மணி நேரமாவது உறங்க வேண்டும். அப்போது தான் இரவோடு இரவாகப் பயணிக்கும்போது கவனமாக வாகனத்தை ஓட்டலாம் என சாரதி திட்டமிட்டிருந்தான். இல்லாவிடில் கொட்டாவி வந்து உடலை அலுப்படையச் செய்யும். உறக்கம் வந்து கண்களை மறைக்கும். அப்படியான சூழ்நிலையில் வாகனத்தை ஓட்டுவது ஆபத்து என்று அவனைவிட அவனது முதலாளிக்கு நன்கு தெரியும்.

அவர் வாகன வியாபாரி என்பதால் மற்றவர்களைவிட அவருக்கு விபத்துகள் பற்றி அதிகம் தெரியும். விபத்துகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்னனென்ன கோலத்தில்? என்ன வேகத்தில்? என்ன அவசரத்தில்? பயணித்தார்கள் என்பது அந்தந்த விபத்துகளை விசாரிக்கும் பொலிஸ்காரரை விட இவருக்கு அதிகம் தெரியும். இருந்தும் அவருக்கு மறுநாள் காலை யாழ்ப்பாணத்தில் நின்றாக வேண்டும். இல்லாவிடில் அவர் ஒரு பெரிய வியாபாரத்தை இழக்க வேண்டிவரும். அத்துடன் மகனுக்குப் பிறந்த நாள். பாடசாலைக்குப் போக முன் அவனைக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டும் என்பது அவரது மனைவியின் உருக்கமான வேண்டுகோள்.

**நேரம்:**

**அதிகாலை 4 மணி 28 நிமிடம் 26 செக்கன்கள்**

வண்டி முறிகண்டியைத் தாண்டி பரந்தன், பளை எனக் கடந்து யாழ். - கண்டி நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டி ருந்தது. சாரதி கண்களை வெட்டி வெட்டித் திறப்பதும் மூடுவதுமாக தனது கண்களுக்குள் வரும் உறக்கத்தை ஜீரணித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த முதலாளிக்குச் சற்றுப் பயமாக இருந்தாலும் அடுத்த தினத்தில் அவருக்கு இருக்கும் வேலைப்பளு அவரை சிந்திக்காமல் தடுத்தது. இன்னும் சில நிமிடங்களில் வீட்டுக்குச் சென்று விடலாம். வீடு போய்ச் சேர்ந்ததும் சிறிது நேர ஓய்வெடுத்த பின் முதல் வேலையாக மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்.




அன்றையதினம் நடக்கவிருக்கும் வியாபாரத்தைக் கூடத் தள்ளிப்போடலாம். ஆனால் மகனின் பிறந்ததினம் அவருக்கு மிகவும் முக்கியமாகப்பட்டது. இருக்கும் சொத்துகளுக்கு எல்லாம் ஒரே வாரிசும் அவன்தான். அவனது பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும். அவன் சந்தோஷப்படாத பட்சத்தில் தன்னிடம் உள்ள சொத்துக்கு அர்த்தம் எதுவும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

புறப்படும்போதும் அவர் மகன் அவருக்குச் சொல்லி இருந்தான் “அடுத்த இரண்டு வருசமும் நான் ஒண்டும் செய்யேலாது. நான் ஏ.எல் சோதினைக்குப் படிக்க வேணும். அதாலை என்ரை வகுப்புப் பிரெண்ட்ஸ் எல்லாரையும் கூப்பிட்டு இந்தமுறை பார்ட்டி வைக்க வேணும். அண்டைக்கு நீங்கள் கட்டாயம் நிக்க வேணும் அப்பா.” என்று அவரைக் கட்டாயப்படுத்தி இருந்தான்.

ஒரேயொரு மகன் என்பதால் மனைவியும் விருப்பப்படுவதில் அர்த்தம் உண்டு என அவர் எண்ணினார். யாழ்ப்பாணத்தின் சாதாரண மக்கள் போல் அவர்களும் வாழ்க்கையைப் புரிந்து கொண்ட விதமும் வேறு. செலவு சித்தாந்தத்தில் மற்றவர்களுக்குத் தாமும் சளைத்தவர்கள் இல்லை என்று காண்பிப்பதில் அதிக அக்கறை கொண்டவர்களாக அவர்களும் இருந்தனர். வண்டி வேகக் கட்டுப்பாட்டிலிருந்து விலகுவதுபோலத் தோன்றியது. அவர் சாரதியைக் கூர்ந்து கவனித்தார். அவன் கண்களை உயர்த்தி இவரைப் பார்த்தான். “என்ன கண்ணை உருட்டுதோ? கொஞ்ச நேரம்தான் ஒரு மாதிரிச் சமாளி. வீட்டை போன உடனை ஒரு மணித்தியாலம் றெஸ்ட் எடு. பிறகும் முக்கியமான வேலைகள் இருக்கு. தம்பியின்ரை பிறந்த நாள் தெரியும்தானே?” என்றார்.

அவனும் பதிலுக்கு ‘ஆம்’ எனத் தலையசைப்பதைப் போன்றிருந்தது.

**நேரம்:**

**அதிகாலை 4 மணி 29 நிமிடம் 38 செக்கன்கள்**

முதலாளி வண்டியிலிருந்த றெக்கோடரை முறுக்கிவிட்டார். எம்.எஸ்.சுப்புலக்சுமியின் சுப்ரபாதம் ஒலிக்கத் தொடங்கியது. கதவுக் கண்ணாடி இடுக்கிலிருந்து வந்த குளிர்காற்று அவரை நடுங்கச் செய்தது. தலையைத் திருப்பி இடப்பக்கமாகப் பார்த்தார். ரெயில்பாதை அவர் செல்லும் திசைக்கு எதிராக வலு வேகமாக ஓடுவதாக அவருக்குத் தோன்றியது. சாரதியின் இடப்பக்க முழங்கை இவரை இடித்தாப்போல அவர் உணர்ந்து கொண்டார். அவன் ஸ்ரெயறிங்கைப் பிடித்துச் சட்டென திருப்ப முயற்சிக்கு முன்....

“ஷெல் விழுந்து வெடித்ததைப் போல ஒரு பேரோலி அந்த வட்டாரத்தையே அதிரச் செய்தது. அந்த வளைவில் எந்தவித பாதுகாப்பு சமிக்ஞைகளும் இல்லாதவாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கருங்கல் நிரம்பியிருந்த அந்தக் கனரக வாகனத்துக்கு அடியில் ஹை-ஏஸ் வாகனம் செருகி நொருங்கிக் கிடந்தது.

**நேரம்:**

**அதிகாலை 4மணி 30 நிமிடம் 44 செக்கன்கள்**

“இரண்டு பேரும் சரி மச்சான்” அதில் விபத்தைப் பார்க்கக் கூடி நின்றவர்களில் இருவர் பேசிக் கொண்டிருந்தனர்.

——— வள்ளல்



# புத்துயிர் பெறும் மானுடம்...!

கடிகாரத்தின் முட்கம்பி நகர்கின்ற ஒவ்வொரு கணமும் இயற்கையும் தன்னைப் புடம்போட்டபடி பயணித்துக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் யுத்தம் நடந்துகொண்டிருக்க அந்தக் களத்தின் மறுபக்கத்தில் மானுட நேயமும் சேவை என்ற பெயரில் பயணித்துக் கொள்கிறது.

காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்க மறுபறம் மரம் நடும் இயக்கமும் தன் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இரசாயனத்தின் சேர்க்கையோடு உணவு உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்க மறுபுறம் இயற்கை விவசாயப் புரட்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மரத்தை வெட்டிக் காடுகளை அழித்துக் கொண்டிருக்க அதற்கெதிரான போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதுபோன்றதொரு போரட்டத்தை நமது வயோதிபர்களும் எதிர்கொள்கின்றனர். தள்ளாத வயதில் அவர்கள் உணவை விட உறவுகளின் அரவணைப்பையே அதிகம் எதிர்பார்க்கின்றனர். வாழ்க்கையின் அர்த்தம் என்னவென்று புரிந்து கொள்ளாத அவர்களின் உறவுகளால் அவர்கள் கவனிக்கப்படாதபோது அவர்கள் தமது சுயத்தை இழந்து விடுகின்றனர். தன்னைப் பெற்று, வளர்த்து, பாலூட்டி, சீராட்டி வளர்த்த தம் பெற்றோர்களைச் செல்லாக் காசாகக் கருதியவர்களால் பலர் கைவிடப்பட்டு வயோதிப மடத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். ஒரு சிலர் காணாமல் போயிருக்கிறார்கள். சிலர் தற்கொலை செய்திருக்கிறார்கள். இவை கடந்த காலத்தே நடந்த சம்பவங்கள்.

இப்படிப்பட்ட சிலர் இன்றும் தெருக்களில் வாழ்ந்தபடி பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதன் ஒருபோதும் செய்யக் கூடாத கொடுமை பெற்றோரைக் கைவிடுவது. அப்படிப்பட்டவர்கள் பாசத்துக்கும், நேசத்துக்கும் ஏங்கி ஏங்கி மரணித்துப் போவதைக் காணும்தோறும் விரக்தியே மேலிடுகிறது. வாழ்க்கை என்பதன் அர்த்தத்தை நன்கு புரிந்து கொண்டவர்கள் ஒருபோதும் இது போன்ற விடயங்களைச் செய்யத் தலைப்படமாட்டார்கள். அப்படிப்பட்ட காலகட்டத்தில் கீழ் காணுவதைப்போல இன, மத,மொழி கடந்தும் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டபோது அது பற்றிப் பிறருக்கும் சொல்லவேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே இதை எழுதுகிறேன்.
மனித நேயம் மரணிக்காது பயணிக்கின்றதென்பதற்கு இதுவும் ஒரு சாட்சியாகும்.

"பெரியவர்களைப் பாதுகாக்க முடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள்" என்று தைரியமாகக் கேட்கிறார் "பசியில்லாத் தமிழகம்" என்ற அமைப்பை நடத்திவரும் முஹமது அலி.

தென் இந்தியாவிலுள்ள தென் காசியைச் சேர்ந்த இவர் இந்த அமைப்பை முதலில் தனது நண்பர் முஸ்தபாவுடன் இணைந்து "பசியில்லாத் தென்காசி" என்ற பெயரிலே ஆரம்பித்திருந்தாலும் பின்னர் அந்த அமைப்பு "பசியில்லாத் தென்காசி" "பசியில்லாக் காரைக்குடி" "பசியில்லா வட மதுரை" "பசியில்லா தேனி" என்று பல மாவட்டங்களிலும் விரிவுபடவே அந்த அமைப்பின் பெயரை நாளடைவில் "பசியில்லா தமிழகம்" என்ற மாற்றியுள்ளார்.

குப்பைத் தொட்டியில் கிடக்கிறதை எடுத்துத் தின்றுவிட்டு வீதிகளில் தன் நிலை மறந்து திரிகிற பல மனிதரைப் பார்த்தபோதும், அந்த மாதிரியான மனிதர்களைக் கடக்கும்போதும் தன் மனம் நெருடுவதாகவும், அப்படி ஆதரவற்ற மனிதர்களுக்கு தம்மாலானதைச் செய்யலாம் என்றும் முதலில் அவர்களுக்குப் பசியைத் தீர்க்கக் கூடிய உணவைக் கொடுக்கலாம் என்று புறப்பட்ட பின் அதை ஒரு அமைப்பாக மாற்றலாம் என்று தோன்றியதே "பசி இல்லா தென்காசி" எனச் சொல்கிறார் முஹமது அலி.

முதலில் வெள்ளிக்கிழமைகளில் மட்டும்தான் அநாதரவானவர்களுக்கு உணவு கொடுத்தோம். பின்பு சிறிது நாட்களில் மூன்று வேளைகளிலும் அவர்களுக்கு உணவைக் கொடுத்தோம். அப்போது ஒரு விடயத்தைப் புரிந்து கொண்டோம். சாதாரண பிச்சைக்காரர்கள் எப்படியாவது தமது பசிக்கான உணவைப் பெறுகிறார்கள். மனநலம் பாதிக்கப்பட்டவர்களும் பிச்சைக்காரரைப்போல தோற்றமளித்தாலும் அவர்கள் உண்மையிலேயே பிச்சைக்காரர்கள் அல்ல. அவர்கள், அவர்கள் சார்ந்தவர்களால் கைவிடப்பட்டவர்கள். பராமரிப்பின்றி இருப்பதாலேயே பிச்சைக்காரரைப் போலத் தோற்றமளிக்கிறார்கள். அவர்களுக்குப் பசி என்றால் என்னவென்று தெரிவதில்லை. அவர்களால் பசியை உணரவும் முடிவதில்லை. அவர்களைக் கொஞ்சம் கூடுதலாகக் கவனிக்க வேண்டும் போலத் தோன்றியது.

பொதுவாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்கும் போது அவர்களைப் பராமரிக்காது கைவிடப்பட்ட ஏதாவதொரு காயத்தோடுதான் இருப்பார்கள். இல்லாவிடில் ஏதாவதொரு நோயோடுதான் இருப்பார்கள். அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களுக்கான மருத்துவம் மற்றும் பிற உதவிகளையும் செய்யலாம் என்றும் தீர்மானித்தோம். அதன்படியே எமது சேவைகனை விரிவுபடுத்தி வருகிறோம். - என்கிறார் முஹமது அலி

கடந்த மாதம் நடுநிசி இரண்டு மணி இருக்கும். ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரை யாரோ ஒரு சாக்கில் கட்டி தெருக்கரையோரத்தில் கொண்டு வந்து வீசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதை கண்ட சிலர் உடனடியாக எமக்குத் தகவல் தந்தனர். போய்ப் பார்த்தோம். அந்தப் பெண் முனகிக் கொண்டு கூனிக் குறுகியபடி சாக்குப் பையினுள் முடங்கிக் கிடந்தாள். உடனடியாக அவளை அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் சேர்த்தோம். அவள் எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாகியிருந்தாள். மரணத்தின் இறுதிக் கணங்களை அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். நாம் வைத்திய சாலையில் அனுமதித்த நாள் தொட்டு இரு வாரங்கள் மாத்திரமே அவள் உயிருடன் இருந்தாள். அவள் மரணித்ததும் அவள் உடலைப் பெற்று அவளுக்குரிய இறுதி மரியாதையையும் செய்து நல்லடக்கம் செய்தோம். இப்படியான தருணங்களில் அப்படிப்பட்டவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்று தெரியாது. அதனால் மூன்று மதப்படியும் இறுதிக்கிரியைகளைச் செய்துதான் அவர்கள் உடலை அடக்கம் செய்வோம். என்கிறார் முஹமது அலி

"தயவு செய்து யாரையும் வேண்டாதவர்களாக எண்ணிக் கைவிட்டுவிடாதீர்கள். இப்படிப் பராமரிக்க முடியவில்லை என்ற கண்டால் எம்மிடம் அவர்களைத் தாருங்கள். நாங்கள் அவர்களை மனித நேயத்தோடு கவனித்துக் கொள்கிறோம்" என்கிறார் அவர்.

மானுடம் ஒரு புறம் மரணித்துக் கொண்டிருக்க அது மறுபுறம் புதிய பொலிவோடு புத்துயிர் பெறுகிறது. உலகப் படிமுறைகளில் இதுவும் ஒன்றோ?

பொதுவாக மனநலம் பாதிக்கப்பட்ட வர்களைச் சந்திக்கும் போது அவர்களைப் பராமரிக்காது கைவிடப்பட்ட ஏதாவதொரு காயத்தோடுதான் இருப்பார்கள். இல்லாவிடில் ஏதாவதொரு நோயோடுதான் இருப்பார்கள். அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களுக்கான மருத்துவம் மற்றும் பிற உதவிகளையும் செய்யலாம் என்றும் தீர்மானித்தோம். அதன்படியே எமது சேவைகனை விரிவுபடுத்தி வருகிறோம். - என்கிறார் முஹமது அலி





## தளபதியின் சமரசம்

மன்னர் முல்லாவுக்கு ஒரு வீட்டுப் பகுதியை அன்பளிப்பாகக் கொடுத்தார்.அந்த வீட்டுக்கு மாடி உண்டு. அந்த மாடிப்பகுதியை மன்னர் ஒரு படைத் தளபதிக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். மாடியில் இருக்கும் படைத் தளபதியின் மனைவி அடிக்கடி கல் உரலில் மா இடிப்பாள். அந்தச் சமயத்தில் கீழ் வீட்டில் இருக்கும் முல்லாவுக்கு பெரிய தொந்தரவாக இருக்கும். மா இடிக்கும் போது வீடே அதிரும். இடியோசை மாதிரி சத்தமும் கேட்கும். முல்லா இரண்டு மூன்று தடவை படைத் தளபதியைச் சந்தித்து கொஞ்சம் மெதுவாக மா இடிக்கு மாறு அவர் மனைவிக்குச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். படைத் தளபதிக்கோ கோபம் வந்து விட்டது. இது மன்னர் எனக்காக அளித்த வீடு. ஆகவே இது எனக்குச் சொந்தமானது. என் வீட்டில் என் மனைவி எப்படி வேண்டுமானாலும் மா இடிப்பாள். அதைக் கேட்பதற்கு நீ யார் ? என்று முல்லாவை அதட்டி அனுப்பி விட்டார்.

மறுநாள் முல்லா கீழே உள்ள தன் வீட்டுப் பகுதியில் கடப்பாறையைக் கொண்டு இடித்துக் கொண்டிருந்தார். கீழே என்ன செய்கிறாய்? என்று படைத் தளபதி மாடியில் இருந்து அதட்டினார். கீழ்ப்பக்கம் இருக்கும் என் வீட்டை முற்றிலுமாக இடித்துத் தள்ளிவிட்டுப் புதிதாக கட்டத் தீர்மானித்திருக்கிறேன் என்றார் முல்லா. அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த படைத் தளபதி என்னைய்யா முட்டாளாக இருக்கிறீரே, கீழ்வீடு முழுவதையும் இடித்தால் மேல் வீடு என்ன ஆகும் என்று யோசித்தீரா ? என்று கோபத்தோடு கேட்டார். மேல் வீட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். எனக்குச் சொந்தமான வீட்டை நான் இடிக்கிறேன். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை என்று கூறி விட்டு முல்லா சுவரை இடிக்கத் தொடங்கினார். பதறிப்போன படைத்தளபதி முல்லாவிடம் சமரசம் பேச முற்பட்டார்.

நாம் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒருவரை யொருவர் அனுசரித்தச் செல்வதுதான் நல்லது. நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம் என்றார் தளபதி. நான் எப்போதுமே யாருக்கும் நண்பன்தான்! என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார்.

## இதயத் துடிப்புகள்



குழந்தை பிறக்கும் போது அதன் இதயம் ஒரு நிமிடத்திற்கு 140 முறை துடிக்கும் .

முயலின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 150 முறையும் , குதிரையின் இதயம் 38 முறையும் துடிக்கும்

சுண்டெலியின் இதயம் 200 முறையும் , நாயின் இதயம் 118 முறையும் துடிக்கும்.

ஆட்டின் இதயம் 60- லிருந்து 78 முறையும் , யானையின் இதயம் 48 முறையும் துடிக்குமாம் .

## விடுகதைகள்





1. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியும் இல்லை. கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை. வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை. அவன் யார்?
2. ஊளையிட்டாலும் ஊரைச் சுமந்து செல்வான் அவன் யார்?
3. கல்லிலே காய்க்கும் பூ. காய்ந்தால் மலரும் பூ: பூவிலே இது வெள்ளைப்பூ. என்ன பூ?
4. எண்ணெய் இல்லை திரியும் இல்லை ஏற்றி வைக்க ஆளும் இல்லை. ஆனாலும் தெரியுது வெளிச்சம். அது எது?

விடைகள்

1. சிலந்தி 2 தொடருந்து 3. சுண்ணாம்பு 4. சூரியன்

## பன்னாட்டு பொன்மொழிகள்

1. ஈக்களைப் போல் இரையும் பொய்கள், உண்மையெனும் சூரிய பிரகாசத்தின் முன் நிற்க முடியாது - ஆபிரிக்கா
2. உடலும் உள்ளமும் கெடுவதற்குக் காரணம் வாய்தான் - போர்னியோ
3. அன்புப் படகு மலை மேல் கூட ஏறும் -மலேசியா
4. அதிகமாகச் சாப்பிடுவது, குறைவாகச் சாப்பிடுவதில் வந்து முடிகின்றது -ஸ்பெயின்






## அட அப்படியா?

- பிற உயிரிகளைக் கடித்தால் தன் வயிற்றிலுள்ள கொடுக்கை தேனீ மீட்டுக் கொள்ளும். பாலூட்டிகளை குறிப்பாக மனிதர்களைக் கடித்தால், நச்சுக் கொடுக்கு, செரிமான உறுப்பு உள்ளிட்ட பகுதிகளையும் திரும்ப மீடக முடியாமல், வயிறு கிழிந்து இறந்து போகின்றது.
- சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து, கிரீன்லாந்து போன்ற நாடுகளில் நுளம்புகளின் நடமாட்டம் வெகு குறைவாக இருக்கின்றது. இது போன்ற நாடுகளில் காணப்படும் உறைபனி, நுளம்புகள் பல்கிப் பெருகாதவாறு தடுத்து விடுகின்றன.

## தென்னை மரம்



பாப்பா பாப்பா கதை கேளு
என் கதையை நீ கேளு
தேங்காய் விளைந்தால் விதையாவேன்
முளைத்துத் துளிர்த்து வளர்ந்தாலே
தென்னம்பிள்ளை நான் ஆவேன்!
ஓங்கி வளர்ந்து உயர்ந்தாலே
தென்னம்பிள்ளை நானாவேன்
தண்ணீர் உரம் எனக்குத் தந்தால்
இளநீர், தேங்காய் நான் தருவேன்.

## அதிகம் கடிக்கும் நுளம்பு எது?



நுளம்பு நம்மை கடிக்கும் முன் நமது உடலின் தட்ப வெப்ப நிலை, இரத்த ஓட்டம் ஆகியவற்றை அறிந்துகொண்டு சரியான இடத்தில அமர்ந்து இரத்தம் குடிக்கின்றது. சில அங்குலங்களுக்கு மேல் நுளம்புகளினால் பார்க்க முடியாது. ஒரு சொட்டு இரத்தத்தை கொண்டு 40 முதல் 50 நுளம்புகள் தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்ளும் , இதை உறிஞ்ச ஒரு நிமிடம் கூட ஆகாது. இனப்பெருக்கத்திற்கு தயாராகும் பெண் நுளம்புகளே அதிகம் மனிதனை கடிக்கின்றன.

# முதலிடத்தில் ஹோல்டர்

எட்டாவது துடுப்பாட் வீரராக களமிறங்கி இரட்டைச் சதமடித்த மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற சாதனையைப் படைத்தவர் மேற்கிந்தியத் தீவுகளின் தலைவரும் சகலதுறை வீரருமான மைக்கல் ஹோல்டர்! இதனால் ஐ.சி.சியின் சகலதுறை வீரருக்கான தரவரிசையில் முதலிடம் பிடித்தார்.

1974 மார்ச்சில் முதற்தர பன்முக ஆட்டக்காரர் என்ற வரிசையில், முன்னாள் மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவரும் சேர் பட்டம் பெற்றவருமான ஸே ாபேர்ஸ் முதலிடத்தைப் பெற்ற பின்னர் - 44 வருடங்களின் பின்னர், ஹோல்டர் அந்த இடத்தைப் பிடித்து தன் நாட்டுக்கு கௌரவித்துள்ளார்.

முதலிடத்தில் இருந்த ஸஹீப் அல் ஹசனையும்(பங்களாதேஷ்) இரண்டாம் இடதிலிருந்த இந்தியாவின் ரவீந்திரா ஜடேஜாவையும் பின்னுக்கு தள்ளிவிட்டு, 440 புள்ளிகளுடன் முதலிடத்திற்குத்



தாவியுள்ளளார் ஹோல்டர். இவருக்கும் ஹஸனுக்குமிடையில் உள்ள புள்ளி வேறுபாடு 25. ஏழாவது விக்கெட்டுக்காக விக்கெட் காப்பாளர் டௌறிச்சுடன் இணைந்து ஹோல்டர் அடித்தெடுத்த 295 ஓட்டங்கள் டெஸ்ட் போட்டிகளில் மூன்றாவது அதிஉயர் தொகை. எட்டாவது துடுப்பாட்டக்காரராக ஆடி எடுத்த இரட்டைச் சதம், (202) மூன்றாவது அதி உயர்ந்த தொகையாகும். தனது இரட்டைச் சதத்தில் இவர் அடித்த எட்டு சிக்ஸ ர்கள் இதுகாலவரை எந்த மே.இந்திய துடுப்பாட்ட வீரராலும் அடிக்கப்பபாத சாதனை.

# பரிசு ரூ.8.5 கோடி



31 வயதான சேர்பியரான ஜொகோவிச், அவுஸ்திரேலிய ஓபன் கிண்ணத்தை மறுபடியும் சுவீகரித்திருக்கிறார். ஸ்பானிய நட்சத்திர வீரரான நடாலுடனான இறுதி மோதல் சூடு பிடிக்கும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போகுமாறு நடாலை வெகு சுலபமாக ஊதித் தள்ளியிருக்கிறார் ஜொகோவிச்!

இந்த வருடம் விம்பிள்டன், அமெரிக்க ஓபன் போட்டிகளின் கிண்ணங்களைச் சுவீகரித்தவர், தனது 15 ஆவது கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை இப்பொழுது தனதாக்கி உள்ளார். இந்த வெற்றி மூலம் அமெரிக்காவின் பிரபல வீரர் சம்பிராஸ் வென்றெடுத்த கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களின் எண்ணிக்கை சாதனையை முறியடித்துள்ளார். இவரைவிட நடால்(17), பெடரர் (20) மேலதிகமான கிண்ணங்களைக் கைப்பற்றி இருக்கிறார்கள். கடந்த 16 தடவைகள் நடாலுடன் மோதியுள்ள ஜொகோவிச், 13 தடவைகள் வெற்றிவாகை சூடியுள்ளார்.


இந்த வருடம் அவுஸ்திரேலிய ஓபன் மோதல்களில் வெற்றிப் பணத் தொகையை அதிகரிப்பு செய்திருந்தார்கள். இதன்படி 4.7 மில்லியன் டொலர்கள் - 8.5 கோடி ரூபாவை ஜொகோவிச் பரிசாக வென்றுள்ளார்.

தொகுப்பு : காவலூர் ஞானம்

# கும்பலிலே கோவிந்தா

வருடத்திற்கு ஒரு தடவை இடம்பெறும் உலக மல்யுத்த பொழுதுபோக்கு நிறுவனம் (WWE ) நடத்தும் 32 வது "றோயல் றம்பிள்" சண்டை கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் இடம்பெற்றது.

மோதிய 30 ஆண் வீரர்களில் பல பலசாலிகள் இருந்தும், செத் றொலின்ஸ் வெற்றியாளரானார்.



பெண் குத்துச்சண்டை வீராங்களை ஒருவர் வீம்புக்கு களத்தில் குதித்து, நன்றாகக் வாங்கிக்கட்டிக் கொண்டார், களத்துக்கு வெளியேயும் வீசப்பட்டார் என்பது இந்த மோதலின் கொசுறுச் செய்தி.

பெண்கள் சுற்றில் காயப்பட்ட ஒருவருக்காக 30வது ஆளாக இறுதி நேரத்தில் சேர்க்கபட்ட பெக்கி லிஞ்ச், ஒரு கால் காயப்பட்ட நிலையிலும், அசத்தலான வெற்றியைத் தேடிக்கொண்டார். ஆனால் முதலில் இடம்பெற்ற சாம்பியன் பட்டிக்கான மோதலில் இவர் சம்பியனான அசுக்காவிடம் மண் கௌவினார்.

கும்பலிலே ஒருவராக விளையாடுவது என்பது அவ்வளவு எளிதல்ல. உடல் பலம், சாதுரியம் - இரண்டுமே வெற்றிக்குத் தேவை! இதில் தெரிவான பலர் உள்ளடங்கலாக பங்குற்றும், இன்னொரு வருடாந்த மோதல் - (1985இல் ஆரம்பித்தது) "றெஸ்லிள் மேனியா" ஏப்ரல் 7 அன்று நியூயோர்க்கில் ஆரம்பமாகிறது. ஏமாற்று லீலைகள், ஆடுபவரே நடுவராக மாறுதல் என்று தில்லுமுல்லுகளுக்கு பஞ்சமில்லாத விளையாட்டைக் காணத் தயாராக இருங்கள்...!

# ஓரங்கட்டப்படும் இங்கிலாந்து

ரென்னிஸ் போன்று இன்று பணம் காய்க்கும் மரமாக மாறியிருக்கிறது கால்பந்தாட்டம். அதிலும் ஐரோப்பிய நாடுகளில் பிரபல வீரர்களை விலைக்கு வாங்கக் கழகங்கள் கோடி கோடியாகப் பணத்தை அள்ளி வீசுகின்றன. வருமானம் அதிகம் என்பதால் கொடுப்பனவும் அதிகம்.

இதுவரை காலமும் இங்கிலாந்தின் மன்செஸ்டர் உதைபந்தாட்டக் கழகமான "மன்செஸ்டர் யுனைற்றெ"தான் உலக மகா பணக்காரனாகத் திகழ்ந்தது." லா லிகா" சம்பியன் சுற்றில் மூன்றாவதாக நிற்கும் ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகமான "றியல் மட்ரிட்" , 852.9 மில்லியன் டொலர் வருமானத்துடன் (1,54,281 மில்லியன் ரூபா) பணக்காரக் கழக வரிசை யில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. முதலாம் இடத்தி லிருந்த "மன்செஸ்டர் யுனைட்டெட்" 765.5 மில்லியன் டொலர் (1,38,365 மில்லியன் ரூபா) வருமானத்துடன், முதலாம்இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்னொரு ஸ்பானிய கழகமான பார்சலோனா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

கால்பந்தாட்டக் கழகங்களின் வருமானம் எந்தவிதத்திலும் குறைவாகத் தெரியவில்லை என்கிறார்கள் அவதானிகள். முதல் இருபது என்ற தரத்திலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் தமக்குள் கூட்டாக 8.41 பில்லியன் டொலர்களை சம்பாதித்துள்ளன. இறுதி வருடத்தை விட இது 6 வீத அதிகரிப்பைக் காட்டும் தொகை என்கிறார்கள்.

"ரொப் 10" என்ற பட்டியலில் ஆறு ஆங்கிலக் கழகங்கள் இருப்பது, இவர்களது பிறிமியர் லீக் தொடர் விளையாட்டின் உலக வலுவை வெளிப்படுத்துகின்றது. அடுத்த வருடம் பிறிமியர் லீக் வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும், இங்கிலாந்தின் ஆட்சி கவிழலாம் என்ற ஆருடமும் சொல்லப்படுகின்றது.



இப்பத்திரிகை இல.10, வில்வம் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நோர்சி மீடியா ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தால் 03.02.2019 அன்று வெளியிடப்பெற்றது.